வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.11.2023 புதன்கிழமை | இதழ் : 332 | பக்கங்கள் : 12

# இந்திய இழுவைப்படகை எமது கடலில் ஒரு வினாடி கூட அனுமதிக்கக்கூடாது!

## சபையில் கூறினார் அமைச்சர் டக்ளஸ்

கொழும்பு, நவ. 08

கச்சதீவை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன் இந்திய இழுவைப்படகை எமது கடற்பரப்பில் ஒரு வினாடி கூட அனுமதிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு. என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர் நிரோஷன் பெரேரா உரையாற்றும்போது எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நிரோஷன் பெரேரா எம். பி. குறிப்பிடுகையில்,

பிரதமர் இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் இந்திய ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார். அது தொடர்பில் கலந்துரையாடப்படுவதாக கூறினார். அண்மையில் ஜனாதிபதி இந்தியாவுக்கு சென்ற போது கச்சதீவையும் வடக்கு கடலையும் வழங்கிவிட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது தொடர்பில் வடக்கு

11

# வடக்கு மக்களின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கே

## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை



கொழும்பு, நவம்பர் 08

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வடக்கு மக்களின் ஆதரவை பெறக்கூடிய ஆளுமை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்று பணிப்பாளரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

11



## நயினாதீவு சென்ற சீன தூதுவர்

யாழ்ப்பாணம், நவ. 08

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் ஷி ஷென் ஹொங் தலைமையிலான குழுவினர் நேற்று நயினாதீவுக்கு சென்றனர்.

இதன்போது குறித்த குழுவினரால், நயினாதீவு நாக விகாரையில் தெரிவு செய்யப்பட்ட 500 குடும்பங்களுக்கு சீன அரசின் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (அ)

## டக்ளஸ் - கஜேந்திரன் சபையில் வாக்குவாதம்

கொழும்பு, நவ. 08

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கிடையில் நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, கடற்தொழில் அமைச்சு இதுவரை எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வடக்கு - கிழக்கில் உள்ள மீனவர்களோடு உரிய முறையில் கலந்துரையாடல்கள்

11

## தபால் ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து!

கொழும்பு, நவ. 08

தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ள பின்புலத்தில் தபால் சேவைகளை பேண வேண்டியதன் அவசியத்தை கருத்திற் கொண்டு, தபால் திணைக்களம் தனது ஊழியர்களின் சகல விடுமுறைகளையும் இரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, இன்று முதல் அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்படுவதாக தபால்மா அதிபர் ருவன் சரத்குமார தெரிவித்துள்ளார்.

கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள தபால்

11

## 13ஆம் திகதி பட்ஜெட்

கொழும்பு, நவ. 08

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த ஒக்கிரோபர் 19 ஆம் திகதி பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூடிய போது எதிர்வரும் 13ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 14ஆம்

11

## தனது சொந்த தேவைக்கு அமைச்சின் வாகனத்தை பயன்படுத்தினாரா ஜீவன்?

கொழும்பு, நவ. 08

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்று யாழ்ப்பாணத்தில் விபத்துக்குள்ளாகியிருந்த நிலையில் அந்த சம்பவத்தை மூடி மறைக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் சென்று இலவசமாக சந்தோஷ் நாராயணனன் இசை கச்சேரி ஒன்றை செய்திருந்தார்.

இந்த இசைக் கச்சேரியை பார்க்க அரச செலவில் அரச வாகனத்தை ஜீவன் தொண்டமான் எடுத்துக்கொண்டு சென்றாரா என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளன.

இந்த விபத்து ஒக்ரோபர் 22ஆம் திகதி இரவு 09.45 மணியளவில் நடந்திருந்தாலும் இந்த விபத்து நடந்து 15 நாட்கள் கடந்துள்ளபோதிலும் இந்த விபத்து தொடர்பான எந்த செய்திகளும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இந்த விபத்து நடந்தது யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு

11

## தரம் குறைந்த எரிபொருள் வழங்கல் உண்மையை வெளிப்படுத்தவேண்டும்!

### அரசிடம் கோருகின்றார் சஜித்

கொழும்பு, நவ. 08

இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் தரம் குறைந்தது என ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் அதனை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பான உண்மைத் தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் கேள்வி நேரத்தில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

சிங்கப்பூரில் இருந்து 40000 மெற்றிக் தொன் டீசலை ஏற்றிக்கொண்டு கடந்த 5ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள போஸ்பவர் என்ற கப்பலின் எரிபொருள் மாதிரிகளை பரிசோதனை செய்ததில், குறித்த

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

யுத்தம் முடிந்து சில மாதங்கள் முடிந்த பின்னர் நமது தலைவர் ஒருவர் ஊடக மாநாடு ஒன்றை நடத்தி, முல்லைத்தீவில் கோட்டா முகாமில் இராணுவத்தினரின் ஆயிரம் குடும்பங்களை குடியமர்த்துவதற்காக அங்கே கிராமம் ஒன்று தயாராகி வருவதாக ஒரு தகவலை வெளியிட்டார்.

அப்போது இந்த ஊர்க்குருவி எங்கும் பத்தி எழுதவில்லை. அதனால் அதுபற்றி எழுத சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அப்படிச் சொன்னவர் அப்போது பாராளுமன்ற உறுப்பினரும் கூட.

முல்லைத்தீவில் அவர் சொன்ன ராணுவக் குடும்பங்களின் கிராமம் இன்றுவரை வந்ததாகத் தெரியவில்லை. அதற்காக முல்லைத் தீவில் சிங்கள குடியேற்றங்கள் மெல்ல மெல்ல நடக்கவில்லை என்று சொல்லப் போவதில்லை. ஆனால், ஒரே தடவையில் ஆயிரம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டதாக இன்றுவரை தகவல் இல்லை. ஆனால், அன்று நமது தலைவர் எந்த ஆதாரத்தை வைத்துச் சொன்னார் என்பது தெரியவில்லை.

அந்தச் செய்தியைப் படித்துவிட்டு, கனடாவிலிருந்து எனது உறவினர் ஒருவர், தொலைபேசியில் பேசும்போது அதுபற்றிக் கேட்டபோது, நான் அவருக்கு சொன்னதுதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

'ஆயிரம் குடும்பங்கள் இங்கே குடியேறுகின்றது என்றால், இங்கே முதலில் ஒரு சிங்களப் பாடசாலை, அதுகும் உயர்தரம் வரை கல்வி கற்கக்கூடிய பாடசாலை அல்லவா வேண்டும். அதற்கு இப்போது சாத்தியம் இல்லாதபோது, அவர்கள் எப்படி இங்கே வந்து குடியேறப்போகிறார்கள்?'.

இந்தச் சம்பவத்தை இப்போது எழுதுவதற்கு காரணம், நமது தலைவர்கள் என்று சொல்பவர்கள் எப்படியெல்லாம் செய்திகளை வெளியிடுகிறார்கள் என்பதை சொல்வதற்காகவே.

மக்களை உசுப்பேற்றுவதற்காகவே இதுபோன்ற செய்திகளை வெளியிடுகிறார்களோ தெரியவில்லை.

அதுவல்ல நாம் இன்று சொல்லவருவது,

இன்றும் அதேபாணியிலேயே ஒரு கருத்தை நமது தமிழ் தேசியக் கட்சி ஒன்றின் தலைவர் வெளியிட்டிருக்கிறார். நேற்றைய ஈழநாடுவில் வெளிவந்த அந்தச் செய்தியை முதலில் இங்கே தருகின்றேன்.

'ஊழல் மோசடிகள் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்வொன்றில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில், இரா.சம்பந்தனை ஊழல் பேர்வழியாக சித்தரித்துள்ளார்.

இரா.சம்பந்தன் நீண்ட காலமாக பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்காமல்,

சம்பந்தனை ஊழல் பேர்வழியாக காட்ட முனைந்தால் அது தவறு!

இரா.சம்பந்தன் நீண்ட காலமாக பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்காமல், சம்பளம் மற்றும் சலுகைகளை பெறுவதாகவும், இது ஊழல் இல்லையா? எனவும் சுமந்திரன் வினவியுள்ளார்.'

இதுதான் அந்தச் செய்தி. இவ்வாறு கூறியிருப்பவர், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தெற்கு தொலைக்காட்சி ஒன்றில் நாட்டின் ஊழல்கள் தொடர்பான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதில் எரான் விக்கிரமசிங்க, ஹரிணி அமரசூரிய, சுமந்திரன், சிரால் லக்திலக ஆகியோர் கலந்துகொண்டனர். அதில் இலங்கையில் நடந்துவரும் ஊழல்கள், முக்கியமாக, அரசியல்வாதிகளாலும், அவர்களின் ஆசிர்வாதத்தோடும் நடந்துவரும் ஊழல்கள் பற்றி தொடர்ந்து பேசப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் சம்பந்தனின் பாராளுமன்ற பிரசன்னம் தொடர்பாக இறுதியாக சுமந்திரனிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

'288 பாராளுமன்ற நாள்களில் 39 நாள்களில் தான் பாராளுமன்றத்துக்கு இரா.சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பெறப்பட்டுள்ள தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையில் அவருக்கு பாராளுமன்ற படிகளாக 40 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக 4 லட்சத்து 19 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதுமக்களின் வரிப்பணமாக உள்ளது. ஊழல் தடுப்புப் பற்றி பேசப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் இது ஊழலின் ஒரு மாற்று வடிவமாக அமைகின்றதா?, இதுவும் ஊழலாக அமையாதா? என்று அந்த நிகழ்ச்சியை நடத்தியவர் சுமந்திரனிடம் கேட்டதற்கே சுமந்திரன் பதிலளித்திருந்தார்.

'சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு வருகைதரமுடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன்.

'எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் பதவியைத் துறந்திருக்க வேண்டும் என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்துவரும் காலத்தில் அதுதொடர்பான சில நடவடிக்கைளை எடுப்போம்' - என்றார்.

சம்பந்தன் மீது தொலைக்காட்சி, ஊழல் புகாரைத் தெரிவித்தபோது, அதனை வேறுவிதமாக திருப்பிவிடும் உத்தியையே சுமந்திரன் கையாண்டர்.

ஆனால் அங்கே என்ன நடந்தது என்பதை அறிந்திராதவராக, சுமந்திரனே சம்பந்தன் மீது ஊழல் புகாரைத் தெரிவித்திருப்பதாக சுரேஷ் தெரிவித்திருக்கிறார்.

நமது தலைவர்கள் இது போன்ற விடயங்களில் எவ்வளவு பொறுப்புடன் கருத்துக்களை வெளியிடுகின்றனர் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் தேவையில்லை.!

-ஊர்க்குருவி.

# மஹேலவால் தோற்றது இலங்கை!

## விமல் வீரவன்ஸ சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 08

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரின் 33ஆவது லீக் ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியை துடுப்பெடுத்தாட விடாது பந்துவீச்சை தேர்வு செய்யுமாறு ஆலோசனை வழங்கியது முன்னாள் வீரர் மஹேல ஜயவர்த்தனவே என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தினார்.

இலங்கை கிரிக்கெட் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் எழுந்த சர்ச்சையின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச கிரிக்கெட் பேரவையை இயக்குவது இந்தியாதான். அவர்களது ஆதிக்கம் தான் இங்கு நிலவுகிறது. சர்வதேச கிரிக்கெட் பேரவை மாத்திரமல்ல இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையை இயக்குவதும் இந்தியாதான். அவர்களது ஆலோசனையின் பிரகாரம்தான் இங்கு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

இந்தியாவுடனான போட்டியில் நாணய சுழற்சியில் இலங்கை அணிதான் வெற்றிபெற்றது. ஆனால், நாணய சுழற்சியில் வெற்றி பெற்றாலும் துடுப்பெடுத்தாட வேண்டாம், பந்துவீச்சை தெரிவுசெய்யுமாறு மஹேல ஜயவர்தனவே அணியின் தலைவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அவர்மீது எனக்கு எவ்வித தனிப்பட்ட கோபங்களும் இல்லை. ஆனால், இவ்வாறு ஏன் அவர் ஆலோசனை வழங்க வேண்டும்?.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்றிருந்தால் நாம் முதலில் துடுப்பெடுத்தாடும் தீர்மானத்தைதான் எடுத்திருப்போம் என இந்திய அணியின் வீரர்களே கூறியிருந்தனர். இலங்கையின் தீர்மானம் குறித்து புதுமையடைந்ததாகவும் கூறியிருந்தனர்.

உலகக் கிண்ண தொடரின் ஆரம்ப நிகழ்வு கூட இந்திய - பாகிஸ்தான் அணிகள் விளையாடும்போதுதான் நடத்தப்பட்டது. இந்தியா இங்கு கிரிக்கெட்டில் பாரிய ஆதிக்கத்தை செலுத்துகிறது.

பிரச்னை கிரிக்கெட் நிர்வாக சபையில் மாத்திரமல்ல. இது அதற்கு அப்பாலான பிரச்னை. முழுமையான கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

கிரிக்கெட் சபையில் உள்ள ஊழல் - மோசடிகளை கண்டறிய தகுதி வாய்ந்தவர்களை நியமிக்க வேண்டும். அர்ஜுன ரணதுங்கவால் மாத்திரம் இதனை கட்டியெழுப்ப முடியாது. துறைசார்ந்த நிபுணர்களை நியமிக்க வேண்டும். முதலில் கிரிக்கெட் சட்டத்தை மறுசீரமைக்க வேண்டும்-என்றார்.

# கோப்பாய் கலாசாலை நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மரம் நாட்டும் விழா முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், நவ. 08

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டை ஒட்டிய மரம் நாட்டு விழா நேற்று காலை கலாசாலை வெளிப்புற வீதியோரத்தில் முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் உலக உணவுத் திட்ட செயற்றிட்டத்தின் கீழ் இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

வீதியோரத்தில் மரங்கள் நாட்டப்பட்டு சிமெந்தினால் அதற்கு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்படும். இந்த வேலைத்திட்டத்தை கோப்பாய் பிரதேச செயலர் சுபாசினி மதியழகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் இணைந்து தொடக்கி வைத்தனர். (அ)

# பாடசாலை மாணவர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி

கொழும்பு, நவ. 08

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 79,310 ஆகவும் பாடசாலைகளின் எண்ணிக்கை 20ஆக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சமீபத்திய தரவுகளின்படி, 2021ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 4,048,937 ஆக காணப்பட்ட நிலையில் இது 2022ஆம் ஆண்டில் 3,969,627 ஆக குறைவடைந்துள்ளது.

இந்நிலையில், 10,146 ஆக இருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை 10,126 ஆக குறைந்துள்ள நிலையில் எனினும் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபைகளுக்குச் சொந்தமான 9,750 பாடசாலைகளின் எண்ணிக்கை 9,730 ஆகக் குறைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 2,004,321 ஆகவும், 2022ஆம் ஆண்டில் குறித்த எண்ணிக்கை 1,969,831 மற்றும் 34,825 ஆல் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதே ஆண்டுகளில், பெண் மாணவர்களின் எண்ணிக்கை 2,034,616 இலிருந்து 1,999,791 ஆகவும் குறைவடைந்துள்ள நிலையில், இது 34,825ஆக குறைந்துள்ளது.

2021ஆம் ஆண்டில், 50க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 1,419 ஆக இருந்தது, 2022ஆம் ஆண்டில் 54 பாடசாலைகளால் 1,473 ஆக அதிகரித்துள்ளது.

அதே காலகட்டத்தில் குறித்த பாடசாலைகளின் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, பெண் ஆசிரியர்களின் எண் ணிக்கை 182,519 ஆகவும், ஆண் ஆசிரியர்களின் எண்ணிக்கை 58,535 ஆகவும் காணப்பட்டது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, கடந்த இரண்டு வருடங்களில் இந்நாட்டில் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 47,361 அதிகரித்துள்ளது.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையில் பிறந்தவர்களின் எண்ணிக்கை 42,243ஆக குறைந்துள்ளதாகவும் குறித்த செய்தித்தாள் தெரிவித்துள்ளது. (அ)

**யாழ்.நகரில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

மின்னஞ்சல் : Jamesraj_uk@yahoo.co.uk

Eelanadu
08.11.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எது உள்நாட்டு விவகாரம்?

சீனத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயத்தின் போது - சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகளை அவர் சந்தித்திருந்தார். இதன் போது - தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போது, அது ஒரு உள்நாட்டு பிரச்னை - உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையிடுவதில்லை - இதுவே சீனாவின் கொள்கை நிலைப்பாடு - என்பதே தூதுவரின் பதிலாக இருந்திருக்கின்றது. ‘ஈழநாடு’ இது தொடர்பில் ஏற்கனவே செய்தியிட்டிருந்தது.

ஒவ்வொரு பெரிய நாடுகளும் அவற்றின் நலன்களின் அடிப்படையில்தான் செயல்படுவார்கள். இலங்கை தீவில் தலையீடு செய்யும் பிரதான சக்திகளான இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுக்கு பிரத்தியேக நலன்கள் உண்டு. இந்தியா ஒரு பிராந்திய சக்தி என்னும் வகையில் அதன் முலோபாய நலன்களை கருத்தில் கொண்டு சில விடயங்களை முன்னெடுக்கும் - அதே போன்று அமெரிக்காவும் அதன் உலகளாவிய நலன்களை கருத்தில்கொண்டு சில நகர்வுகளை முன்னெடுக்கும். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இதனை விளங்கிக் கொள்வதும் அதனடிப்படையில் செயல்படுவதும்தான், தமிழர் தரப்புக்கள் செய்ய வேண்டியது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் சீனாவும் அதன் நலன்களின் அடிப்படையில்தான் செயல்படுகின்றது - அப்படித்தான் செயல்படவும் முடியும். இன்றைய உலக அரசியல் அரங்கில் சீனா ஒரு பிரதான பேசுபொருள். இதற்கு சீனாவின் அசுர வளர்ச்சியா காரணம் - இல்லை - சீனாவின் அரசியல் முறைமையே அதற்கான காரணம்.

சோவியத் யூனியனின் வீழ்சிக்கு பின்னர், தாராளவாத உலக ஒழுங்கு மட்டுமே - ஒரேயொரு அரசியல் ஒழுங்கு என்னும் நிலைமை உருவாகியது. இதற்கு அமெரிக்கா தலைமையேற்றது. கடந்த இருபது வருடங்களாக உலக அரசியலில், அமெரிக்கா தலைமையிலான ஒழுங்கே மேலாதிக்கம் செலுத்தி வருகின்றது. இந்த ஒழுங்கை கேள்விக்குள்ளாக்கும் சக்தியாக சீனா எழுச்சியடைந்து வருவதே இன்றைய போட்டியரசியலுக்கான காரணமாகும். தாராளவாத ஜனநாயக முறைமையின் கீழ் இயங்கும் ஒரு நாடாக சீனா இருக்குமாயின் - அதன் பொருளாதார எழுச்சி அமெரிக்காவிற்கு ஒரு பிரச்சினைக்குரியதாக இருந்திருக்காது. ஒரு சுமுகமான போட்டி நிலையாகவே இருந்திருக்கும். சீனாவின் அரசியல் கட்டமைப்பானது, மேற்குலகம் முன்னிறுத்தும் ஜனநாயக விழுமியங்களுக்கு அமைவானதல்ல.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சீனா தமிழ் மக்களோடும் உறவாட முற்படுகின்றது. எவர் வரினும், அவருடன் பேசுவதில் தவறில்லை. ஆனால் நமது அணுகுமுறை எவ்வாறானதாக இருக்கவேண்டும் - என்பதுதான் பிரச்னைக்குரியது. சீனத் தூதுவர் தமிழ் பிரதிநிதிகளை சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையீடு செய்வதில்லை என்கின்றார். அவ்வாறு கூறும் சீனாவோ - மறுபுறமாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. சர்வதேச அரங்குகளில் இலங்கை அரசின் நிலைப்பாடுகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றது.

இறுதி யுத்தத்தின் போது, ராஜபக்ஷவின் யுத்தத்திற்கு பல்வேறு வழிகளிலும் சீனா உதவியது. இது தொடர்பில் அப்போது இராணுவத் தளபதியாக இருந்த, சரத் பொன்சேகாவே கூறியிருக்கின்றார் - இந்தியாவும் அமெரிக்காவும் ஆயுத உதவிகளை செய்யாத காரணத்தினால்தான் - நாங்கள் சீனாவின் பக்கமாக செல்ல வேண்டியேற்பட்டது. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பிரச்னை ஒரு உள்நாட்டு பிரச்னைதான் - ஆனால் அதனை ஒரு உள்நாட்டு பிரச்னையாக கருதி, சீனா எட்ட நிற்கவில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு - நீதி என்று வருகின்ற போதே - அதனை உள்நாட்டு விவகாரமாக பார்க்க வேண்டும் என்கிறது சீனா.

இந்த இடம்தான் பிரச்னைக்குரியது. இந்த இடம்தான், இலங்கையின் விவகாரங்களில் தலையீடு செய்யும் ஏனைய நாடுகளும் - சீனாவும் வேறுபடும் புள்ளியாகும். இந்த இடம்தான் தமிழர் நோக்கில் பிரச்னைக்குரியது. தமிழர் பிரச்னையை ஒரு உள்நாட்டு விவகாரமாக நோக்கினால் - வெளித் தரப்புக்களுக்கு எதுவுமில்லை. அவ்வாறு வெளித்தரப்புக்களின் தலையீடின்றி பிரச்னையை தீர்ப்பதற்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. இந்த நிலையில் - இதனை ஒரு உள்நாட்டு விவகாரமாக நோக்குமாறு, சீனா எவ்வாறு வலியுறுத்த முடியும்?

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*“எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்”*

**- லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)**



# ரணில் மீதான நம்பிக்கை வீழ்ச்சி!

## கருத்துக் கணிப்பில் அதிர்ச்சித் தகவல்

*கொழும்பு, நவ. 08*

*ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் மீது இலங்கையில் 10 வீதத்திற்கும் குறைவானவர்களே நம்பிக்கை வைத்துள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு தெரிவித்துள்ளது.*

*தேசத்தின் மனநிலை எனும் தொனிப்பொருளில் குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*குறித்த ஆய்வு அறிக்கையின் படி “ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் அங்கீகாரம் ஜூன் மாதத்தில் 21வீதமாக இருந்த நிலையில் அது நவம்பர் மாதத்தில் 9 வீதமாக குறைவடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.*



*அதே போன்று கடந்த நான்கு மாதங்களில் அரசின் மீது மக்கள் கொண்டுள்ள திருப்தி என்ற காரணியும் நான்கு மாதங்களில் 12 வீதத்தில் இருந்து 6 வீதமாக குறைவடைந்துள்ளதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.*

*அதேபோல், பொருளாதார நம்பிக்கைக்கான சுட்டெண்ணும் 62இல் இருந்து 44 வீதமாக சரிந்துள்ளது.*

*இந்த கருத்துக்கணிப்பில் அனைத்து அம்சங்களிலும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில் பாரிய வீழ்ச்சியும் பின்னடைவும் ஏற்பட்டுள்ளது என்பதை குறித்த அறிக்கையின் தரவுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.*

*இந்த ‘தேசத்தின் மன நிலை’ கருத்துக்கணிப்பானது ஆண்டிற்கு மும்முறை நடத்தப்படுகிறது. இதற்கமைவாக குறித்த ஆய்விற்காக நாடு முழுவதிலிமுள்ள மக்களிடம் கருத்துகள் கோரப்பட்டு அவை தொகுக்கப்படடு அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*(அ)*

# ஒட்டிசுட்டான் விபத்தில் குடும்பஸ்தர் பலி!

*முல்லைத்தீவு, நவ. 08*

*ஒட்டிசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமளங்குளம் பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.*

*நெடுங்கேணியில் இருந்து ஒட்டிசுட்டான் நோக்கிச் சென்ற ஹைஎஸ் ரக வாகனமும், ஒட்டிசுட்டான் பகுதியில் இருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் ஒலுமடு நெடுங்கேணி பகுதியை சேர்ந்த 37 வயதுடைய பழனியாண்டி தியாகராசா என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளவராவார்.*

*இவ் விபத்து சம்பவம் தொடர்பாக ஹைஎஸ் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார்.*

*மேலதிக விசாரணைகளை ஒட்டிசுட்டான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.*

*(அ)*

# வேலை நிறுத்தத்தில் தபால் ஊழியர்கள்!

*கொழும்பு, நவ. 08*


*கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள தபால் அலுவலகங்களை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் 48 மணிநேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தபால் ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.*

*அரசாங்கம் பிரச்னைக்கு தீர்வுகாணத் தவறினால் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தபால் ஊழியர்கள் தயாராக இருப்பதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.*

*இதேவேளை, நுவரெலியாவில் உள்ள தபால் அலுவலகத்தை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 08 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - ஐப்பசி 22**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : ஏகாதசி**




**மேடம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் அடைவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். சோர்வு வந்து நீங்கும். முன்னேறும் நாள்.

**துலாம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசிகிட்டும். மெனைவி வழியில் மதிக்கபடுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள். இனிமையான நாள்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. திடீர் பண வரவு உண்டு. மேலதிகாரி மதிப்பார். புதிய யுக்திகளை கையாண்டு வியாபாரத்தை பெருக்குவீர்கள். புதியபாதை தெரியும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். வளைந்து கொடுத்துப் போவது நல்லது. புதிய முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துகொள்வார்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உயரதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

# அதிமுக பெயர், கொடி பயன்படுத்த ஓ.பி.எஸ்ஸுக்கு தடை!

*சென்னை, நவ. 08*

அதிமுகவின் பெயர், கொடி, சின்னம் உள்ளிட்டவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்திற்கு இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிமுகவின் சின்னம், கொடி உள்ளிட்டவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வம் தரப்பினருக்கு தடை விதிக்க கோரி எடப்பாடி பழனிசாமி வழக்கு தொடர்ந்திருந்தார். அதிமுக பொதுச் செயலாளராக தன்னை தேர்தல் ஆணையமும், உயர் நீதிமன்றமும் அங்கீகரித்துள்ள நிலையில், ஓ.பன்னீர்செல்வம் ஒருங்கிணைப்பாளர் என தொடர்ந்து கூறிவருவதாகவும், இது தொண்டர்களிடையே குழப்பத்தை விளைவிப்பதாகவும் மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று 3ஆவது முறையாக விசாரணைக்கு வந்தது. அப்போது மேல்முறையீடு வழக்கில் எந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என ஈ.பி.எஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய உள்ளதால் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று ஓ.பி.எஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# மு.க.ஸ்டாலின் நலமுடன் உள்ளார்!

*சென்னை, நவ. 08*

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நலமுடன் இருப்பதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நிலையில், கடந்த 3ஆம் திகதி முதல் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கவில்லை. குறிப்பாக, சென்னை பெசன்ட் நகரில், 'நடப்போம் நலன் பெறுவோம்' என்ற திட்டத்தை தொடங்கி வைக்க இருந்த நிலையில், அதிலும் அவர் கலந்து கொள்ளவில்லை.

வைரஸ் காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருப்பதாக மருத்துவமனை சார்பில் அறிக்கை வெளியான நிலையில், சில நாட்கள் ஓய்வெடுக்க மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

(அ)

# தமிழகத்தை புரட்டி போட்ட மழை

*சென்னை, நவ. 08*

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் கடந்த சில நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. நாமக்கல், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரியில் கனமழை நேற்றிரவு கொட்டி தீர்த்தது. மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது.

மதுரை மாவட்டத்தில் நேற்று முன் தினம் மாலை தொடங்கி நேற்று காலை வரை விட்டு விட்டு மழை கொட்டி தீர்த்தது. நள்ளிரவு நேரத்தில் பெய்த கனமழையால் சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

மதுரையின் புறநகர் பகுதிகளான திருப்பரங்குன்றம், திருமங்கலம், டி.குண்ணத்தூர், கல்லுப்பட்டி, பேரையூர் சுற்றுவட்டாரப்பகுதிகளில் கொட்டித் தீர்த்த கனமழையால் ஆங்காங்கே மழைநீர் தேங்கியுள்ளது.

ஈரோடு மாவட்டத்திலும் சில நாட்களாக இரவு நேரங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் சில நாட்களாக மழை பெய்து வருகிறது. நாமக்கல் நகரின் தாழ்வான சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியதால், பல இடங்களில் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தென்காசி மாவட்டத்தில் 124 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கடனாநதி அணை , ராமநதி அணை, கருப்பாநதி அணை நீர்மட்டம் உயர்ந்தது. தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மாதமாக மழை வெளுத்து வாங்குகிறது. மொத்தம் 48 அடி உயரம் கொண்ட பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 42 அடியாகவும், 77 அடி உயரம் கொண்ட பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 72 அடியாகவும் உள்ளதால் குமரி மாவட்டத்திற்கு வெள்ள அபாயம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கனமழை காரணமாக திற்பரப்பு அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கோவை, நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், சேலம், நாமக்கல், திருப்பூர், கரூர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

(அ)

# தங்கச்சிமடத்தில் மீனவர் போராட்டம்

*சென்னை, நவ. 08*

இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இராமநாதபுரம்- தங்கச்சிமடம் பகுதியில் மீனவர்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை சிறையில் உள்ள 64 தமிழக மீனவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், கடந்த 6 ஆண்டுகளாக மீட்கப்படாமல் இலங்கை வசம் உள்ள 133 விசைப்படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தியுமே இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் நேற்று முதல் தொடர் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

"இலங்கை நீதிமன்றத்தில் படகின் உரிமையாளர்கள் நேரடியாக முன்னிலையாகி விசைப்படகுகளை மீட்பதற்கு மீட்பு குழு இலங்கை செல்வதற்கு மத்திய அரசு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும்.

பாரம்பரிய பகுதியான கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க உரிமையை பெற்று தர வேண்டும். பாதிக்கப்பட்ட படகுகளுக்கு 30 இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்" உள்ளிட்ட கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் முன் வைத்துள்ளனர்.

(அ)

# தீபாவளிக்கு மறுநாள் பொது விடுமுறை

*சென்னை, நவ. 08*

தீபாவளியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு நவம்பர் 13ஆம் திகதியும் விடுமுறை அளித்து தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு-

இந்த ஆண்டு தீபாவளியை 12.11.2023 அன்று கொண்டாடும் பொருட்டு தமது சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 13.11.2023 அன்று ஒருநாள் மட்டும், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவும், அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில், 18.11.2023 அன்று பணி நாளாக அறிவித்தும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, 'தீபாவளி பண்டிகை இந்த ஆண்டு ஞாயிற்றுக் கிழமை வருகிறது. மறுநாள் திங்கள்கிழமை கேதார - கௌரி விரத நோன்பு வருவதால் அன்று தமிழக அரசு விடுமுறை தினமாக அறிவிக்கவேண்டும்' என மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் உள்பட பல்வேறு தரப்பினர் கோரிக்கை வைத்ததும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# எதிர்வரும் நாட்கள் மிக ஆபத்தானவை

## கூறுகின்றார் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, நவ. 08

**தற்போதைய நாட்கள் தமிழ் மக்களுக்கு ஆபத்தானவை என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**



அண்மைக்காலமாக இலங்கை அரசாங்கம் இளைஞர்களையும், இளைஞர்கள் செயற்பாட்டாளர்களையும் கைது செய்து அவர்களை குற்ற புலனாய்வுத் துறை மற்றும் இராணுவப் புலனாய்வு ஊடாக விசாரணை என்ற பெயரில் தன்னுடைய நடவடிக்கைகளை ஆரம்பித்து இருக்கின்றது.

அண்மைக்காலமாக ஊடகவியலாளர்கள் கைது செய்யப்படுவது இதனுடைய ஒரு கட்டமாக காணப்படுகிறது.

பல இடங்களில் இளைஞர்கள் விசாரணைக்காக அழைக்கப்படுவதுடன் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற பல அரசியல் செயற்பாட்டாளர்கள், தமிழ் தேசிய செயற்பாட்டாளர்களை விசாரணைக்கு என அழைத்து அவர்களைக் கடுமையான விசாரணையின் பிற்பாடு பயமுறுத்தி-அச்சுறுத்தி விடுகின்ற செயற்பாடுகளையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் அண்மைக் காலமாக இவ்வாறான செயற்பாட்டை அவதானிக்க முடிகின்றது.

இது அரசாங்கத்தின் ஒரு கையாலாகா தனத்தை காண்பிக்கின்றது.

குறிப்பாக நவம்பர் மாதத்தில் தமிழீழத்தில் மண்ணுக்காக தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவில் கொள்வதால் இம்மாதம் தமிழர்களுடைய உணர்வோடு சேர்ந்த ஒரு தேசிய மாதமாக கருதப்படுகின்றது.

அவ்வாறான இந்த மாதத்தில் குடும்பத்தவர்கள் மற்றும் சகோதரர்கள் தங்கள் உறவுகளுக்காக விளக்கேற்றுகின்ற நிகழ்வுகளில் ஈடுபடும்போது அவற்றை அச்சுறுத்தும் வகையில் தான் அரசாங்கம் இந்த செயற்பாட்டை முன்னெடுத்து இருக்கின்றது.

தான் ஒரு லிவரல்வாதி, நிலைமாறாக் கால நீதிப் பொறிமுறையின் அடிப்படையில் வணக்கங்கள் செலுத்துவதற்கு எந்த தடையும் இல்லை.

மயிலத்தமடு, மாதவனை போராட்டங்களில் ஈடுபடுகின்றவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அச்சுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் அதிகமாக அரசாங்கத்தாலும், அரச படைகளாலும் குறிப்பாக பிக்குமார்களாலும் முன்னெடுக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறுபட்ட இடங்களில் பிக்குமாரினால் தமிழர்களுடைய இடங்கள் கபளீகரம் மற்றும் வன்பறிப்பு செய்யப்படுவதுடன் அவர்கள் அந்த இடங்களிலே மக்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கைகளும் மிகப் பெரிய அளவிலே இடம்பெற்று வருகின்றது.

இந்த நாட்டின் ஜனநாயகம் செத்து, நீதி செத்து இந்த நாடு ஒரு சிங்கள பௌத்த இனத்துக்குரிய ஒரு நாடாக அல்லது அவர்களை மட்டுமே கையாளுகின்ற ஒரு நாடாக, ஏனைய இனங்கள் வாழ முடியாத பன்முகத்தன்மை இல்லாத ஒரு நாடாக தன்னை அடையாளப்படுத்தி செல்வதையே அண்மைக்கால போக்குகள் மிகத் தெளிவாக காட்டுகின்றன.

முல்லைத்தீவு நீதவான் சரவணராஜா பதவியில் இருந்து விலகியமை, பொலிஸாரின் அண்மைக்கால நடவடிக்கைகள், திருகோணமலையில் பிக்குமாரால் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் அமைக்கப்படுகின்ற விகாரைகள், அதற்கு எதிராக தமிழ் மக்கள் குரல் கொடுக்கின்றபோது அவர்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கைகள் மற்றும் அதை செய்தி சேகரிக்க செல்லும் பத்திரிகையாளர்களை அந்த இடத்தை விட்டு அகற்றுத்தல் நடவடிக்கைகள் போன்ற செயற்பாடுகள் தம்மை ஒரு முழுமையான அச்சத்துக்குள் வைத்திருப்பதயே காட்டுகின்றன.

குறிப்பாக வடக்கு-கிழக்கில் இராணுவ பிரசன்னங்களோடும், பொலிஸ் படைகளின் பிரசன்னங்களோடும் சிங்கள ஆதிவாசிகளை, இந்த மண்ணை கபளீகரம் செய்யும் வகையில் பிக்குமார் தலமையில் கொண்டுவந்து அரசாங்கம் முன்னிறுத்துகின்றது என்பதே, இந்த நடவடிக்கைகள் வெளிக்காட்டுகின்றன.

ஆகவே இந்த நாட்கள் தமிழ் மக்களுக்கு ஆபத்தான நாட்களாகவும், தொடர்ந்து அவர்களை அச்சுறுத்துகின்ற நாட்களாகவும் அமைந்திருக்கின்றன-என்றார். (அ)

# சிறப்பாக நடைபெற்று முடிந்தது கரைதுறைப்பற்று பண்பாட்டு விழா





முல்லைத்தீவு, நவ. 08

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை மற்றும் கலாசார பேரவை இணைந்து நடத்தும் 2023 ஆம் ஆண்டுக்கான கரைதுறைப்பற்று பிரதேச பண்பாட்டு விழா நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி உமா மகள் மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற குறித்த பிரதேச பண்பாட்டு விழாவில் பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் கலந்து கொண்டார்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்( நிர்வாகம்) கனகசபாபதி கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சிவபாலன் குணபாலன், முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சந்திரசேகரன் ஜசிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு ஆரம்பமான குறித்த நிகழ்வில் கரைத்துறைப்பற்று பிரதேச கலைஞர்களுடைய பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான இணையத்தளம் நேற்று அங்குரார்ப்பணம்!



யாழ்ப்பாணம், நவ. 08

சமய சமூகப் பணிகளில் ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்குரிய இணையத்தளம் ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனினால் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் இணையத்தளச் சேவையின் மூலம் உலகெங்கிலுமுள்ளவர்கள் ஆலயத்தில் இடம்பெறும் பூசைகள், நிகழ்வுகள் மற்றும் சமூக நலத் திட்டம் தொடர்பான முழுமை யான விவரங்களை அறிந்துகொள்ள முடிவதுடன் சமூக நலத் திட் டங்கள் தேவைப்படுவோருக்கு உரிய முறையில் திட்டங்கள் சென்றடையவும் உதவும் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# வரவு-செலவுத்திட்டத்துக்கு முன் விசேட அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, நவ. 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 13 ஆம் திகதி காலை விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது என தெரியவருகின்றது.

இக்கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு அமைச்சர்களுக்கு அறிவுறுத்தப்படவுள்ளது.

2023 ஆம் நிதியாண்டுக்கான பாதீடு எதிர்வரும் 13 திகதி நண்பகல் 12 மணிக்கு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னதாகவே அமைச்சரவைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், பாதீட்டின் உள்ளடக்கம் உள்ளிட்ட விடயங்களுக்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்படவுள்ளது.

13 ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்டஉரை மாத்திரமே நடைபெறும்.

மறுநாள் நவம்பர் 14 முதல் 21 வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 7 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (வரவுசெலவுத்திட்ட) இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. வரவுசெலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனையடுத்து, குழுநிலை விவாதம் நவம்பர் 22 ஆம் திகதி புதன்கிழமை முதல் டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 19 நாட்கள் இடம்பெறவுள்ளது. அதற்கமைய, 2024 நியதியாண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 6.00 மணக்கு இடம்பெறவுள்ளது.

பாதீட்டு கூட்டத்தொடர் காலத்தில் தனிப்பட்ட வெளிநாட்டு பயணங்களை தவிர்த்துக்கொள்ளுமாறும், வாக்கெடுப்பு நேரங்களில் கட்டாயம் சபையில் இருக்குமாறும் ஆளுங் கட்சியினருக்கு ஜனாதிபதியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# எம்.பிக்களினால் இயற்றப்படும் சட்டங்கள் என்றாவதொரு நாள் அவர்கள் மீதும் பாயும்!

## சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 08

**நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக உருவாக்கப்படும் சட்டமூலங்களுக்கு கையுயர்த்தும் பாராளுமன்ற உறுப்பினர்களால் இயற்றப்படும் சட்டங்கள் என்றாவதொரு நாள் தமக்கு எதிரானதாக அமையும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். நீதிமன்றத்தால் மாத்திரம் சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியாது. நிகழ்நிலை காப்பு சட்டமூலம்,பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பனவற்றை அரசாங்கம் மீளப்பெறும் அளவுக்கு மக்கள் போராட்டத்தை ஒன்றிணைக்க வேண்டும்.அதற்கு சட்டத்தரணிகள் கூட்டிணைவு என்ற அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்குவோம் என சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.**

சட்டத்தரணிகள் கூட்டிணைவின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் 'வாயை மூடும் சட்டங்கள் வேண்டாம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலம், உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பனவற்றுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. எதிர்ப்பு தெரிவித்தால் 'வாயை மூடு - அமரு' என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது.

மறுபுறம் பொருளாதார பாதிப்பு, ஊழல் மோசடி ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து பத்து பேர் ஒன்று கூடி வீதியில் போராட்டத்தில் ஈடுபட முடியாது. 10 பேரின் போராட்டத்தை 100 பொலிஸார் ஒன்றிணைந்து அடக்குகிறார்கள். கண்ணீர்ப் புகை வீச்சி மற்றும் நீர்த்தாரை பிரயோகித்து போராட்டத்தை கலைக்கப்படுகின்றன.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசாங்கத்தின் மோசடிகளை சுட்டிக்காட்டி மக்களுக்கு உண்மையை எடுத்துரைக்கும் தொழிற்சங்கங்கள் இலக்கு வைக்கப்படுகின்றன.அதற்காகவே நிகழ்நிலை காப்பு சட்டமூலம்,பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.



நீதிமன்ற கட்டமைப்பில் மீது அரசாங்கம் மறைமுகமாக அழுத்தம் பிரயோகிப்பதை கடந்த கால சம்பங்கள் ஊடாக அறியலாம். அரசியலமைப்புக்கு அமைய செயற்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதிகளை பாராளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழுவுக்கு அழைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளை ஒரு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம்.

பொலிஸ்மா அதிபர் நியமன விவகாரத்தில் அரசியலமைப்பு பேரவையை நிறைவேற்றுத்துறை 'வாயை மூடு' என்று குறிப்பிட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. தற்போதைய பொலிஸ்மா அதிபருக்கு சேவை கால நீடிப்பு வழங்க ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை அரசியலமைப்பு பேரவை நிராகரித்தது. ஆனால் ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவையின் தீர்மானத்தை புறக்கணித்து தன்னிச்சையான முறையில் பொலிஸ்மா அதிபருக்கு நான்காவது தடவையாகவும் சேவை நீடிப்பு வழங்கியுள்ளார்.

நீதிமன்றத்தின் மீது மாத்திரம் நம்பிக்கை கொள்வது தவறானதாகும்.சகல பிரச்னைகளுக் கும் நீதிமன்றம் மாத்திரம் தீர்வாக அமையாது. அரசாங்கத்தினால் தயாரிக்கப்படும் சட்டமூலங்கள் அரசியலமைப்புக்கு முரணா அல்லது முரணற்றதா என்பதை மாத்திரமே நீதிமன்றம் ஆராயும். நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். கருத்து வெளிப்படுத்தல் மற்றும் கருத்து சுதந்திரம் என்பனவற்றின் முக்கியத்துவத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்திய நிகழ்நிலை காப்பு சட்டமூலம்,உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தினால் எதிர்காலத்தில் ஏற்படும் விளைவுகள் குறித்து 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் அவதானம் செலுத்த வேண்டும் - என்றார்.



# நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தை காரைநகரில் பார்வையிட்ட சீன தூதர்

யாழ்ப்பாணம், நவ. 08

காரைநகர் சாம்பலோடை பிரதேசத்தில் சீன அரசின் உதவியுடன் அமையவுள்ள நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தை இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷி ஷென் ஹொங் நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

இச் சந்திப்பில் உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபை செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் சீன அரசாங்கத்தின் உதவித் திட்டம் தொடர்பில் தூதுவரினால் மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் பொதுமக்களின் தேவைகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்துகொண்டார்.

இந் நிகழ்வில் சீனத் தூதுவருக்கு பொதுமக்கள் மாலை மற்றும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். (அ)

# கிரிக்கெட் இடைக்காலக் குழுவுக்கு நேற்று நீதிமன்று இடைக்கால தடை

கொழும்பு, நவ. 08

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால், சிறிலங்கா கிரிக்கெட்டின் இடைக்கால நிர்வாகக் குழுவை நியமிப்பதற்கு வெளியிடப்பட்ட வர்த்தமானியை இடைநிறுத்தும் உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

சிறிலங்கா கிரிக்கெட்டின் தலைவர் சம்மி சில்வாவினால் இது தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, இரண்டு வாரங்களுக்கான இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தை இடைநிறுத்தி, இடைக்கால நிர்வாகக்குழுவொன்று விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் நியமிக்கப்பட்டது.

முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்கவின் தலைமையிலான குழு நேற்று முன்தினம் கடமைகளை பொறுப்பேற்றிருந்தது.

(அ)

# அமெரிக்காவுடன் உறவை பேண எங்களுக்கு முழு உரிமை உண்டு!

## கூறுகின்றார் விஜித ஹேரத்



கொழும்பு, நவ. 08

அமெரிக்காவுடன் உறவுகளை பேணுவதற்கு எங்களுக்கு உரிமையுள்ளது என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்கள், இலங்கை வம்சாவளிகளான அமெரிக்கர்களுக்கு உரையாற்றுவதற்கு தனக்குரிமையுள்ளதாக அது கூறியுள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசநாயக்காவின் அமெரிக்க விஜயம் குறித்து வெளிவந்துள்ள விமர்சனங்கள் குறித்து கருத்து தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் அனைத்து கட்சிகளுடனும் உறவுகளை பேணுவோம். கொழும்பில் அமெரிக்க தூதுவரை நாங்கள் சந்தித்ததை கேள்விக்குட்படுத்துவதில் நியாயமில்லை.

கோட்டாபய பதவியிலிருந்து அகற்றப்பட்ட பின்னரும் அதற்கு முன்னரும் நாங்கள் அமெரிக்க தூதுவரை சந்தித்துள்ளோம்.

ஜே.வி.பி தலைவர் அமெரிக்காவின் பல நகரங்களில் உரையாற்றியுள்ளார். அங்குள்ள இலங்கையர்களுடன் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது- என்றார்.

(அ)

# இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதல்ல!

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 08

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் அல்லது அதன் சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானவை அல்லவென உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உயர் நீதிமன்ற வியாக்கியானத்தை, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸ பாராளுமன்றிற்கு நேற்று அறிவித்தார்.

இந்தநிலையில், இணையவழி சட்டமூலத்தின் சில சரத்துகளை குழுநிலை விவாதத்தின் போது, திருத்தம் செய்து, அதனை சாதாரண பெரும்பாண்மையில் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாமையினால், அதன் அரசியலமைப்பு தொடர்பான அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 10 மனுக்களின் நடவடிக்கைகளையும் நிறைவுறுத்துவதாக உயர் நீதிமன்றம் பாராளுமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளது.

(அ)

# ஆசிரியரினால் தாக்கப்பட்ட மாணவர் வைத்தியசாலையில்

கொழும்பு, நவ. 08

பொகவந்தலாவையில் உள்ள பாடசாலையொன்றின் ஆசிரியரால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில், மாணவர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையின் நான்காம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் மீதே, இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை காவல் துறையில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த மாணவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில், பொகவந்தலாவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தமிழர் பிரதேசங்களை அமெரிக்கா சீனாவிடம் இருந்து காக்கவேண்டும்!

## வவுனியாவில் நேற்று போராட்டம்

வவுனியா, நவ. 08

**வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்கவேண்டும் என வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று வவுனியாவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீன தூதுவர் ஷி ஷென் ஹொங் தலைமையிலான குழுவினர் இரண்டாம் நாளாக நேற்று நயினாதீவுக்கு விஜயம் செய்திருந்தனர்.

இதேவேளை, வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கத்தினரால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 2450ஆவது நாளாக சுழற்சிமுறைப் போராட்டத்தை முன்னெடுத்த பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் உள்ள கொட்டகைக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டமானது இடம்பெற்றது.




இலங்கையின் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களாகிய நாம் எமது தமிழர் தாயகத்தில் உள்ள காணிகளிலும் மீன்பிடி நீரிடத்திலும் சீனாவின் அத்துமீறலை வன்மையாக எதிர்க்கிறோம் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தினர். (அ)

# ஜனாதிபதி எனக்கு அழுத்தம் கொடுத்தார்

## பாராளுமன்றில் அமைச்சர் ரொஷான்

கொழும்பு, நவ. 08

இடைக்கால குழுவை நியமிப்பதற்கான தனது முடிவை மாற்றிக்கொள்ளுமாறு ரணில் விக்ரமசிங்க தனக்கு அழுத்தம் பிரயோகித்ததாக அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தான் இந்த விடயத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என ரொஷான் ரணசிங்க, நேற்று பாராளுமன்றில் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்தோடு நாம் நியமித்த இடைக்கால கட்டுப்பாட்டுக் குழுவை நீக்கவே முடியாது.

நாம் கிரிக்கெட் நிர்வாக சபையை இடைநிறுத்தி, புதிய குழுவொன்றை சிறிது காலத்திற்கு நியமித்திருந்தோம்.

தற்போது இந்தக்குழுவுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற 20-20 போட்டித் தொடரில் நேர்ந்த, ஊழல் மோசடிகள் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்குமாறு கணக்காய்வாளரினால் குறிப்பிடப்பட்டமைக்கு



இணங்கவே, நாம் இந்தக் குழுவை நியமித்திருந்தோம்.

இன்று (நேற்று) இந்தக் குழுவுக்கே தற்போது நிதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இதன்ஊடாக, மீண்டும் ஊழல்வாதிகள் இன்று முதல் பணியில் இணைந்து கொள்வார்கள்.

இந்நாட்டு மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், கிரிக்கெட் நிர்வாகக் குழுவை மாற்ற வேண்டும் என கோரியமைக்கு இணங்கத்தான் நான், இந்த மாற்றங்களை செய்திருந்தேன்.

இன்று நான் கிரிக்கெட் சபையில் இடம்பெற்ற அனைத்து ஊழல் - மோசடிகள் தொடர்பாகவும் விசேட உரையாற்றவுள்ளேன்-என்றார். (அ)

# 32 அடி பள்ளத்தில் வீழ்ந்த பாரவூர்தி!

## மூவர் காயம்

கொழும்பு, நவ. 08

வட்டவளை பகுதியில் பாரவூர்தியொன்று விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

பொருட்களை ஏற்றிச்சென்ற பாரவூர்தி ஒன்றே நேற்று காலை வீதியை விட்டு விலகி 32 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில், பாரவூர்தியின் சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட அடையாள அட்டை

கொழும்பு, நவ. 08

மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி வாக்களிக்கும் வகையில், விசேட அடையாள அட்டையை அறிமுகப்படுத்த தேசிய தேர்தல் ஆணையம் தீர்மானித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டையின் மூலம் மாற்றுத்திறனாளிகள் ஒவ்வொரு தேர்தலிலும் சிரமமின்றி வாக்களிக்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இலங்கையில் 1.6 மில்லியன் மாற்றுத்திறனாளிகள் உள்ளதாகவும், அதேவேளை இந்த வருடத்தில் அந்த எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாகவும் கூறினார்.

எனவே மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வசதிகளை வழங்கும் வகையில் விசேட அடையாள அட்டையை அறிமுகப்படுத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அடுத்த ஐந்து வருடங்களுக்குள் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க கூறினார். (அ)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை!

கொழும்பு, நவ. 08

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பிரச்னைகளுக்கு சாதகமான தீர்வுகள் கிடைக்காத நிலையில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று முதல் பொதுசுச் காதார பரிசோதகர்களினால் வழங்கப்படும் அனைத்து அறிக்கைகளும் இடைநிறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மேம்பாட்டு மதிப்பாய்வு உட்பட அனைத்து கூட்டங்களிலும் பங்கேற்பது இடைநிறுத்தப்படும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் அனைத்து தொற்றுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தும் விலகி செயற்படவுள்ளதாக அச்சங்கம் அறிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி முதல் அனைத்து களப்பணிகளில் இருந்தும் விலகி செயற்படவுள்ளதாகவும், டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணிகளை நடத்தவுள்ளதாகவும் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (அ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 08

காலி-எல்பிட்டிய, யக்குடுவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் காலி-எல்பிட்டிய, யக்கட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த விமல் சிசிர குமார என்ற 43 வயதுடைய தச்சுத் தொழிலாளி ஆவார்.

இளைஞர் குழு ஒன்றினால் வீதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவம் ஒன்றுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கியே அவர் உயிரிழந்துள்ளமை பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# கிரிக்கெட் இடைக்கால நிர்வாக குழுவுக்கு ஜனாதிபதியின் அனுமதி அவசியமில்லை!

## கூறுகிறார் ரொஷான் ரணசிங்க



கொழும்பு, நவ. 08

கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவை நியமிக்க ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் அனுமதியை பெறுவதற்கான அவசியமில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமையவே, குறித்த இடைக்கால நிர்வாகக் குழு நியமிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா கிரிக்கெட்டின் பழைய நிர்வாகத்தை நீக்கி, ஏழு பேர் அடங்கிய புதிய இடைக்கால நிர்வாகக் குழுவொன்று விளையாட்டுத்துறை அமைச்சரினால் நேற்று முன் தினம் நியமிக்கப்பட்டது.

எனினும், குறித்த இடைக்கால நிர்வாகக் குழுவை நியமிப்பதற்கு முன்னர், தமக்கு அறியப்படுத்தியிருக்கவில்லை என ஜனாதிபதி நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது, தெரிவித்திருந்தார்.

அத்துடன், அந்த இடைக்கால நிர்வாகக் குழு தொடர்பில், ஆராய்வதற்கு அமைச்சரவை உப குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. (அ)

# இறக்காமம் பிரதேச செயலகத்தில் பொதுமக்கள் சேவைப் பணியகம்!

## மக்கள் பாவனைக்கு திறந்து வைப்பு

அம்பாறை, நவ. 08

**இறக்காமப் பிரதேச செயலகத்தில் பொதுமக்களுக்கு கிடைக்குப் பெறும் சேவைகளை மிக எளிதாகவும், துரிதமாகவும், நேர விரயமின்றியும் பொதுமக்கள் தங்களது சேவைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்கான பல்வேறு வகையான துரித வேலைத் திட்டங்கள் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸான் (நளீமி)தலைமையில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.**

அதன் முதற்கட்டமாக பொது மக்கள் தங்களது சேவைகளை துரிதகதியிலும், வினைத்திறனாகவும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நன்னோக்கில் "பொது மக்கள் சேவைப் பணியகம் மக்கள் பாவனைக்காக பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.றஸ்ஸானினால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக் கப்பட்டது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், கணக்காளர் திருமதி. பாத்திமா றிம்ஷியா அர்ஷாட், நிருவாக உத்தியோகத்தர் எம். எம். முஹம்மட் தௌபீக், கிராம அலுவலர் நிர்வாக உத்தியோகத்தர் எச்.பி.என். யசரத்ன பண்டார, சமுர்த்தி தலைப்பீட முகாமையாளர் ஏ.எல்.நௌபீர், மற்றும் காணி உத்தியோகத்தர் என்.எல்.எம்.மாஹிர் உட்பட கிளைத் தலைவர்கள், கிராம



உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த காரியாலயத்தில் பரீட்சை கட்டணங்கள் செலுத்துதல், பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், வாகன அனுமதிப் பத்திரம் வழங்கல், வாகன உரிமை மாற்றம், வருமானச் சான்றிதழ், கால்நடைகள், போக்குவரத்து அனுமதி பத்திரம், மஹாபொல உதவித் தொகை போன்ற பல சேவைகளை பொதுமக்கள் "பொதுமக்கள் சேவை பணியகம் ஊடாக பெற்றுக்கொள்வதற்கான சகல வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)



# அன்னமலை வைத்தியசாலையில் இரண்டு மாடி கட்டடம் கையளிப்பு

அம்பாறை, நவ. 08

உலக வங்கியினால் அமுல்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தெரிவு செய்யப்பட்டு நிதி பெறப்பட்ட அன்னமலை பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்கான இரண்டு மாடிக்கட்டடம் நேற்று முன் தினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது

அன்னமலை பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம் றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் விசேடமாக முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தற்போதைய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான மருத்துவர் ஜீ. சுகுணன் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தார்

இந்நிகழ்வில் பணிமனையின் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம் மாஹிர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டதுடன் ஏனைய சுகாதார உத்தியோகதத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# பொத்துவில் ஆதார வைத்தியசலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி



அம்பாறை, நவ. 08

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி அமைப்பதற்கான இடங்களையும், அங்கு இடம்பெற்றுவரும் கட்டட நிர்மாணப் பணிகள் உள்ளிட்ட சகல அபிவிருத்திப் பணிகளையும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், பொத்துவில் ஆதார வைத்திய சாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.ஐ.எம்.றஹீம் மற்றும் பொறியியலாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

சீன அரசின் நிதியுதவில் சகல வசதிகளையும் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, நிர்வாகப் பிரிவு வசதிகளைக் கொண்ட கட்டட தொகுதி என பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அம்பாறையில் சூடு! ஒருவர் உயிரிழப்பு!!

அம்பாறை, நவ. 08

அம்பாறை மாயாதுன்ன பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம் பெற்ற குறித்த துப்பாக்கி பிரயோகத்தில் 42 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டில் வீட்டின் பின்புறம் குளித்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வயற் காணி தொடர்பாக ஏற்பட்ட தகராறே துப்பாக்கி பிரயோகத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பான நீதவான் விசாரணையைத் தொடர்ந்து பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்ய பண்டாரதுவ பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# இலங்கை தமிழரசுக் கட்சியின் பொத்துவில் நிர்வாகத் தெரிவு

காரைதீவு, நவ. 08

இலங்கை தமிழரசுக்கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான நிர்வாகத் தெரிவு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தா. கலையரசன் தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பொத்துவில் தொகுதி தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஆலையடிவேம்பு இணைத் தலைவருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

இணைத் தலைவராக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவு செய்யப்பட்டார் .

திருக்கோவில் தமிழரசுக் கட்சியின் உபசெயலாளரும் ஆசிரியருமான த.தயாபரன் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு கிளை உபசெயலாளருமான சி.சிவகுமார் பொத்துவில்தொகுதியின் உபசெயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

பொத்துவில் பிரதேச சபை உறுப்பினரும் பொத்துவில் இலங்கை தமிழர கட்சியின் கிளைத் தலைவருமான சுபோகரன் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டார். மேலும் சிரேஷ்ட உறுப்பினர்களாக சோ.பாக்கியராஜ், க.தருமராஜா, அ.கலா நேசன், தே.புனிதன், சி.இராஜகுமார், வே.கேதீஸ்வரன், இ.ஜெகநாதன், க.கோகுலன் ,ஆ.தர்மதாச், க.செல்வ பிரகாஷ் இலங்கை தமிழரசுக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான 15 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ)

# கோளாவில் அம்மன் கலாசார மண்டபம் அறநெறி பாடசாலை கட்டட திறப்புவிழா

அம்பாறை, நவ. 08

அக்கரைப்பற்று பிரதேசத்தின் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் கோளாவிலில் அமைந்துள்ள அம்மன் மகளிர் இல்ல வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட அம்மன் கலாசார மண்டபம் மற்றும் அம்மன் அறநெறிப்பாடசாலைக்கான புதிய கட்டட திறப்பு விழாவும் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

அம்மன் இல்ல பவுண்டேசன் ஏற்பாட்டில் அம்மன் இல்லத்தின் பணிப்பாளர் வே. வாமதேவன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாத வனானந்த ஜீ மஹராஜ் கலந்து கொண்டதுடன் அவரது முன்



னிலையில் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக ஆலையடிவேம்பு உதவி பிரதேச செயலாளர் ரெ.சுவாகர் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக அம்மன் இல்ல பவுண்டேசன் போசகர் எஸ்.கமலதாஸ், மற்றும் அம்பாறை மாவட்ட இந்துகலாசார மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஆலையடிவேம்பு பிரதேச இந்து கலாசார உத்தியோகதத்தர் திருமதி சர்மிளா பிரசாந் சிவனருள் பவுண்டேசன் பொருளாளர் எஸ்,ஜனாத்தனன் மற்றும் அம்மன் இல்ல நிர்வாகத்தின் அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், பாலர்பாடசாலை ஆசிரியர்கள், இல்ல மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# ஆபத்துமிக்க நாடுகளில் இருந்து வந்து தஞ்சம் கோருவோருக்கு உடன் வேலை!

## 6 மாதம் காத்திருக்கும் அவசியம் பிரான்ஸில் இனிமேல் கிடையாது

பாரிஸ், நவ. 08

**ஆபத்தான நாடுகள் என்று ஆண்டு தோறும் பட்டியலிடப்படுகின்ற நாடுகளில் இருந்து வரும் புகலிடக் கோரிக்கையாளர்கள், தங்களது தஞ்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்த கையோடு -வதிவிட அனுமதிக்காகக் காத்திருக்காமல் - உடனேயே தொழில் புரிய அனுமதிக்கப்படவுள்ளனர்.**

**பிரான்ஸில் வரவிருக்கும் புதிய குடியேற்றச் சட்ட மூலத்தில் இதற்கான விதிகள் அடங்கியுள்ளன என்று பாரிஸ் செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**



தற்போதைய சட்டத்தின் படி புகலிடம் கோரிய ஒருவர் சட்டப்படி தொழில் செய்வதற்கு ஆறு மாத காலத்துக்கு மேல் காத்திருக்க வேண்டும்.

பிரான்ஸின் உள்துறை அமைச்சு அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகள் தொடர்பான கடுமைப்படுத்தப்பட்ட புதிய சட்ட மூலத்தைப் பல வார கால தாமதங்களுக்குப் பின்னர் செனட் சபையிடம் கையளித்திருக்கிறது. அதனை அடுத்தே அந்தச் சட்ட மூலத்தில் உள்ளடங்கியுள்ள சரத்துக்கள் செய்தி ஊடகங்களுக்குக் கிடைத்துள்ளன.

“குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல், வெளிநாட்டவரை உள்வாங்குவதை மேம்படுத்துதல்” என்ற நோக்கிலான புதிய சட்ட மூலம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை செனட் சபையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.
அடுத்துவரும் நாட்களில் செனட் உறுப்பினர்கள் அதனை விவாதிக்கவுள்ளனர்.

வீஸா மற்றும் ஆவணங்கள் இன்றிச் சில தொழிற்துறைகளில் பணிபுரிவோருக்கான வதிவிட அனுமதி, இலகுபடுத்தப்பட்ட நாடு கடத்தல், வதிவிடம் கோரி விண்ணப்பிப்போருக்கான ஆகக் குறைந்த பிரெஞ்சு மொழிப் புலமை போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய இந்தச் சட்ட மூலம் ஏற்கனவே அரசியல் மட்டங்களில் கடும் வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டுள்ளது. குடியேற்றம் காரணமாக நாடு எதிர்கொள்கின்ற அச்சுறுத்தல்களுக்கு முடிவு கட்ட இந்தப் புதிய சட்ட விதிகள் போதாது என்று கூறும் வலதுசாரி ரிப்பப்ளிக்கன் கட்சி விதிகளை மேலும் கடுமையாக்குமாறு கோரி வருகின்றது.

உணவகம், கட்டடத் தொழில், குழந்தைகள்-முதியோர் பராமரிப்பு, வீட்டுப் பணிகள் போன்ற தொழில்களில் வீஸா இன்றிப் பணி புரிவோருக்குத் தற்காலிக வதிவிட அனுமதிகளை வழங்குவதைப் புதிய சட்ட மூலம் அனுமதிக்கிறது.

சட்டவிரோதமான வழிகளில் நாட்டுக்குள் நுழைந்து உணவகம் போன்ற துறைகளில் சட்டவிரோதமாகத் தொழில் புரிவோருக்கு இவ்வாறு விசேட வதிவிட அனுமதி வழங்குவதை வலதுசாரிப் பழமைவாதிகள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

(அ)



# காஸாவில் உயிரிழப்புகள் 10 ஆயிரத்தை தாண்டியது!

ஜெருசலேம், நவ. 08

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கு இடையில் இடம்பெறும் மோதலால் காசா பகுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

1,400 இஸ்ரேலியர்களைக் கொன்ற ஹமாஸின் தாக்குதலுக்கு பதிலடியாக, சரியாக ஒரு மாதத்திற்கு முன்பு, இஸ்ரேலியப் படைகள் காஸாவில் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

மேலும் தெற்கு காஸாவில் உள்ள இலக்கை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் குறைந்தது எட்டு பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இரத்தக்களரிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் கடவுளின் பெயரில் இந்த கோரிக்கையை விடுப்பதாகவும் பாப்பரசர் பாப்பரசர் பிரான்சிஸ் கேட்டுக் கொண்டார்.

மேலும் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரில் உடனடி மனிதாபிமான போர்நிறுத்தத்துக்கு ஐ.நா. உட்பட அரச சார்பற்ற நிறுவனங்கள் அழைப்பு விடுத்திருந்தன.

இதன் காரணமாக தற்போது கைச்சாத்தான இலவச ஆயுத வழங்கல் ஒப்பந்தத்திற்கு சீனா வருத்தம் தெரிவிப்பதுடன் அதனை முற்றாக எதிர்ப்பதாகவும் சீற்றத்துடன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொரிஸ் ஜோன்சன்-மொரிசன் இஸ்ரேலுக்கு கூட்டாக பயணம்!



லண்டன், நவ. 08

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிசனுடன் இஸ்ரேலுக்கு கூட்டுப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 7 ஆம் திகதி முதல் ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, தமது ஆதரவை வெளிப்படுத்துவதற்காக அவர்கள் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது, எதிர்க்கட்சித் தலைவர் யாயிர் லிப்பிட்டை சந்தித்து, அவர்கள் தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் தாக்குதலுக்கு இலக்கான கிப்புட்ஸ் கஃபர் ஆசா பகுதியையும் பார்வையிட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 7 ஆம் திகதி முதல் இஸ்ரேலில் ஆயிரத்து 400 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 200 இற்கும் மேற்பட்டோர் ஹமாஸ் படையினரால் பணயக் கைதிகளாக சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு யூத மக்கள் மீதான மிகவும் மோசமான தாக்குதல் என பிரித்தானிய முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# இஸ்ரேல்-ஹமாஸ் யுத்தத்தை நிறுத்த சர்வதேசம் அழைப்பு

## அடியோடு மறுக்கிறது இஸ்ரேல்

டெல் அவிவ், நவ. 08

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தத்துக்காக அனைத்துலக அளவில் அழுத்தம் அதிகரித்து வருகின்றபோதிலும் போர் நிறுத்ததிற்கு இஸ்ரேல் மறுப்பு தெரிவித்துள்ளது.

நெருக்கடி நிலையால் லெபனானில் பிரச்னை அதிகமாக, அந்த மிரட்டலைக் கட்டுப்படுத்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளிங்கன் முயன்று வரும் நிலையில், காஸா நகரை தன் படைகள் சூழ்ந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்தது.

இஸ்ரேலிடமிருந்து காஸா கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ‘இதற்குமுன் இல்லாத அளவுக்கு குண்டுவீச்சுகளால் தாக்கப்பட்டதாக’ ‘வாஃபா’ எனும் பலஸ்தீனத்தின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் குறிப்பிட்டிருந்தது.

இதற்கிடையே, அனைத்து தொடர்புச் சேவைகளும் இணையச் சேவைகளும் மீண்டும் துண்டிக்கப்பட்டுவிட்டதாக பலஸ்தீன தொலைத்தொடர்பு நிறுவனமான ‘பால்டெல்’ தெரிவித்துள்ளது.



பிளிங்கனுடன் பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் சந்தித்தபோது, உடனடி போர் நிறுத்தம் தொடர்பில் அனைத்துலக அளவில் வந்த அழைப்பை அவரும் விடுத்தார்.

போர் நிறுத்தம் ஹமாசுக்குத் துணைபோகும் என்று அமெரிக்காவின் கவலை குறித்து பிளிங்கன் மீண்டும் சுட்டிக்காட்டியபோது, அது இயலாது என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்தார்.

ஹமாஸ் அமைப்பினரால் பிணை பிடிக்கப்பட்டோரை விடுவிக்கவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

“பிணைக்கைதிகளை விடுவித்தால்தான் போர் நிறுத்தம் இருக்கும். இது அகராதியிலிருந்து முற்றிலும் அகற்றப்பட வேண்டும்,” என்று நெத்தன்யாகு கூறினார்.

(அ)

# புதுமாத்தளன் கடற்கரையில் ஒதுங்கின கஞ்சா பொதிகள்!

## தீவிர விசாரணையில் பொலிஸார்

முல்லைத்தீவு, நவ. 08

**புதுமாத்தளன் கடற்கரையில் கஞ்சாப் பொதிகளை கைப்பற்றிய முல்லைத்தீவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.**



முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுமாத்தளன் கடற்கரையில் பொதிகள் காணப்படுவதாக நேற்றுக் காலை 6.30 மணியளவில் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கடற்கரைக்குச் சென்ற இராணுவத்தினர் கஞ்சாப் பொதிகளை கண்டனர்.

இது தொடர்பாக இராணுவத்தினரால் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார், குறித்த கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கி கிடந்த தலா 22 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா பொதிகளைக் கைப்பற்றினர்.

இதுவரை 11 கஞ்சா பார்சல் கைப்பற்றப்பட்ட நிலையில் கடற்கரை பகுதி முழுவதும் மேலும் பொதிகள் ஒதுங்கியுள்ளதா என்று சோதனை செய்ததுடன் மீனவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் விசாரணைகளின் பின்னர் கஞ்சாப் பொதிகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# பலஸ்தீன விடுதலை ஆதரவு கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், நவ. 08

பாலஸ்தீன விடுதலை ஆதரவு கருத்தரங்கு கடந்த 5ஆம் திகதி யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தோழர் றொபேட் சுபத்திரன் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் அரசியல், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கு தோழர் சுகு சிறிதரன் கருத்துரையுடன் ஆரம்பமானது.

தேசிய சமூக விடுதலைப் போராட்டத்திற்கும் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கும் இடையிலான வரலாற்று உறவு பற்றியும் பலஸ்தீனம் காசாவில் இஸ்ரேல் சியோனிச அரச பயங்கரவாதத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள மனித பேரவலம் பூமிப்பந்தில் இருந்து பலஸ்தீன மக்களை அழிப்பதற்கான நாஜிக்கள் பாணியிலான சியோனிச இனச்சுத்திகரிப்பு தொடர்பாகவும் ஏழரை தசாப்தங்கள் கடந்து பலஸ்தீனர்களின் உரிமைப் போராட்டத்திற்கு விடிவு வேண்டும் என்றும் மேற்கு கரையிலும் காசாவிலும் கிழக்கு ஜெருசலேமிலும் பலஸ்தீனர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் மற்றும் ஹமாஸ் இயக்கத்தால் இஸ்ரவேலில் நடத்தப்பட்ட தாக்குதலில் சாதாரண மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாகவும் 4000 வருட வரலாறு பலஸ்தீனப் பிரச்னைக்கு இருக்கிறது என்றும் கருத்தரங்கில் பங்குபற்றியோர் கருத்துக்களை தெரிவித்தனர்.

பலஸ்தீனர்கள் நசுக்கப்பட்டால் பாலஸ்தீனர்கள் மாத்திரம் அல்ல உலகளாவிய அளவில் நீதிக்கான போராட்டங்களும் பலவீனப்படுத்தப்படும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

ஹமாஸ் எவ்வாறாக இருந்தாலும் அதனால்தான் பாலஸ்தீனர்களின் பிரச்சினை மீண்டும் உலக அளவில் பேசுபொருளாகியது என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

உலகளாவிய வெகுஜன எழுச்சிகள் பலஸ்தீனர்களுக்கு சார்பாக இருந்தாலும் மேற்கின் அதிகார பூர்வ ஊடகங்களும் அரசுகளும் அதற்கு எதிராகவே பரவலாக இருக்கின்றன என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றியோர் ஆர்வத்துடன் தமது கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். காலை 10.30 முதல் 12.30 வரை கருத்தரங்கு இடம்பெற்றது.

# விவசாயிகளுக்கு இலவச டீசல்

கொழும்பு, நவ. 08

கடந்த ஒரு வருடத்தில் வறட்சி காரணமாக பயிர்கள் சேதமடைந்த 65,000 ஏக்கர் விவசாயிகளுக்கு பெரும்போகத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 17,000 ரூபா பெறுமதியான டீசலை இலவசமாக வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

உர கொள்முதல் செய்ய அரசு வழங்கும் மானியம் 15,000 ரூபாவுடன் ஒரு ஹெக்ரேயருக்கு இழப்பீடாக ரூ.1 இலட்சம் ரூபாவுக்கு கூடுதலாக இந்த சலுகை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பருவத்தில், இலங்கையில் உள்ள விவசாயிகளுக்கு சீன அரசாங்கம் 6.5 மில்லியன் லீற்றர் டீசலை இலவசமாக விநியோகித்ததுடன், பெருமளவிலான சிறுபோக நெல் விவசாயிகள் பெற்றுக்கொள்ள வராததால் 02 மில்லியன் லீற்றர் டீசல் மிச்சமாகியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# வரவு-செலவுத் திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி முயற்சி

## ஆஷூ மாரசிங்க கூறுகிறார்

கொழும்பு, நவ. 08

நாட்டின் பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்துகொண்டு மக்களுக்கு வரவு-செலவுத் திட்டம் ஊடாக முடியுமான நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி முயற்சித்து வருகிறார் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூமாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை ஜனாதிபதி வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்வார் என்ற விடயத்தை அறிந்த தொழிற்சங்கங்கள் போராட்டங்களை மேற்கொண்டதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றியாக கருத முயற்சிக்கின்றனர்.

ஆனால் நாட்டு மக்கள் எதிர்கொண்டுவரும் கஷ்ட நிலைமை ஜனாதிபதிக்கு தெரியும். அதேபோன்று நாட்டை கொண்டு செல்ல வேண்டிய வழியும் ஜனாதிபதிக்கு தெரியும். இந்த அனைத்து விடயங்களையும் முகாமைத்துவம் செய்துகொண்டு முடியுமானளவு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கே ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

அத்துடன் இந்த விடயங்களை செய்வதற்கு அரசாங்கத்திடம் பணம் இருக்கிறதா என்பது கேள்வி இருக்கிறது. ஆனால் அரசாங்கத்துக்கு கிடைக்கவேண்டிய வரி வருமானங்களை சேர்த்துக்கொள்வதை முறையாக மேற்கொள்வது அவசியமாகும். அதனை முறையாக மேற்கொள்ள அரசாங்கம் பல விசேட வேலைத்திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது.

நாட்டின் வருமானங்களை ஒன்றுசேர்ப்பதற்காக ஜனாதிபதி காரியாலயத்தில் விசேட குழுவொன்றை அமைத்திருக்கிறது. அதேபோன்று பாராளுமன்றத்தில் வழிவகைகள் பற்றிய குழு ஊடாக நாட்டின் வருமானங்களை சேர்க்கும் வேலைத்திட்டம் செயற்பட்டு வருகிறது. நிதிக்குழுவிலும் இதுதொடர்பான நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

மேலும் 2017இல் நாங்கள் 3ரில்லியன் வருமானம் பெற்றுக்கொண்டோம். அதனால் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் எமக்கு தேவையான வருமானங்களை ஏற்படுத்திக்கொள்ள முடியுமாகி இருக்கிறது. நாட்டின் வரி வருமானங்கள் மற்றும் வேறு வருமானங்களை சேர்க்கும் 40 நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் தொடர்பாக நாங்கள் முறையாக ஆராய்ந்து பார்த்துள்ளோம்.

அதனால் நாட்டுக்கு வரவேண்டிய வரி வருமானங்கள் மற்றும் ஏனைய வருமானங்களை நாங்கள் முறையாக சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தால் வரி அதிகரிக்க தேவை ஏற்படாது. அதேநேரம் இந்த வரி வருமானங்கள் அனைத்தையும் சேர்க்க முடியுமானால் எமக்கு 3 ரில்லியன் ரூபா வரை வருமானத்தை சேர்த்துக்கொள்ள முடியுமாக இருக்கும்.

என்றாலும் சில அதிகாரிகள் வரி வருமானத்தை சேர்ப்பதற்கு பதிலாக வரு பணத்தை அவர்களின் பொக்கெட்டுக்குள் போட்டுக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. இவ்வாறான அதிகாரிகள் தொடர்பில் அறிந்தால் அது தொடர்பாக தகவல் தெரிவிக்க ஆணைக்குழுவில் முறையிடலாம். அதனால் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் மாற்றத்தை எம்மில் ஆரம்பிக்க வேண்டும் -என்றார். (அ)

# 47 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கிளிநொச்சியில் சிக்கினார்!



கிளிநொச்சி, நவ. 08

கிளிநொச்சியில் 47 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள தனியாரின் வீட்டில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் இரவு சோதனை மேற்கொண்ட பொலிஸார் 47 கிலோ கஞ்சாவை மீட்டதுடன், சந்தேசத்தின் பேரில் 44 வயதுடைய ஒருவரை கைது செய்தனர். (அ)

# காதலிக்க மறுத்த யுவதியை கத்தியால் குத்திய இளைஞன்!

கொழும்பு, நவ. 08

காதலை மறுத்த காரணத்திற்காக தனது உறவினான பெண்ணை கத்தியால் குத்தி காயப்படுத்திய இளைஞன் நாரஹேன்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்டவர் கொழும்பு நாரஹேன்பிட்டி நில அளவை திணைக்களத்தின் கட்டுப்பாட்டுப் பிரிவில் பணிபுரியும் காலி பின்னதுவ வலஹந்துவா பகுதியைச் சேர்ந்த 29 வயது யுவதி ஆவார்.

இவருடன் காலி பிரதேசத்தில் இருந்து கொழும்பு நாரஹேன்பிட்டி நோக்கி பயணித்த பஸ் ஒன்றில் சந்தேக நபரும் பயணித்துள்ளார்.

குறித்த பஸ் யுவதியின் திணைக்களத்துக்கு முன்னால் நிறுதப்பட்ட நிலையில், இறங்குவதற்கு தயாரான யுவதியை சந்தேக நபர் தன்னிடம் இருந்த கத்தியால் குத்தி காயப்படுத்தி உள்ளார்.

காயமடைந்த யுவதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். யுவதியின் வலது கையின் முழங்கை பகுதியிலும் இடது காலின் முழங்காலுக்கு கீழ் பகுதியிலும் கத்தியால் குத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# தனியார் துறை ஊழியர்களையும் பலப்படுத்துவதே எம் எதிர்பார்ப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கூறுகிறார்

கொழும்பு,நவ.8

16 இலட்சம் அரச துறை ஊழியர்களையும் 80 இலட்சம் தனியார் துறை ஊழியர்களையும் பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான முறையான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆரம்பித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தின் வெற்றியின் ஊடாக எதிர்காலத்தில் மின்சாரம், எரிவாயு மற்றும் எரிபொருளின் விலைகளை குறைத்து, மக்களுக்கு சிறந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியும் எனவும், இந்த வேலைத் திட்டத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொள்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, "பதினாறு இலட்சம் பேருக்கும் அதிகமாக உள்ள அரச பொறிமுறையை வரவு செலவுத் திட்டத்துடன் பொருத்துவதில், வங்குரோத்தான நாட்டின் எதிர்கால இலக்குகளை எவ்வாறு அடைவது என்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக 2019 ஆம் ஆண்டில் நமது ஆட்சி மாற்றப்பட்ட பிறகு பொருளாதார நெருக்கடி உருவாகியது. அக்காலத்தில் வரிக் கொள்கை மாற்றப்பட்டது. குறிப்பாக தனிநபர் வருமான வரி குறைக்கப்பட்டது. அதேபோன்று, தொடர்ந்தும் அதிகளவில் காணப்பட்ட வரித் தொகைகளை நீக்கி, வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. இந்த வரிச் சலுகைகள் காரணமாக இந்த நாடு வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இறுதியாக 2022 ஆம் ஆண்டாகும் போது மத்திய வங்கி பணத்தை அச்சிட்டு சம்பளம் வழங்கும் நிலை தோன்றியது. அந்த நிலையுடன், நாம் ஒரு விடயத்தை நினைவில் கொள்ள வேண்டும். எப்போதும் ஒரு அரசாங்கம் வீழ்ச்சி அடைவது அந்நாட்டின்



பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போதுதான். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எப்போதும், இவ்வாறு வீழ்ச்சி அடைந்த நாட்டைப் பொறுப்பேற்று அதனை மீட்டெடுத்துள்ளார். உதாரணமாக 2015 ஆம் ஆண்டு பத்தாயிரம் ரூபாவால் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டாலும் கூட அது அரச ஊழியர்களின் சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம், இலங்கை வரலாற்றில் முதன் முறையாக அவர்களின் வருமானத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினார் - என்றார். (அ)

# கொழும்பு - பதுளை வீதிக்கு மீண்டும் பூட்டு

கொழும்பு,நவ.80

கடும் மழை காரணமாக பத்கொடவில் மண்சரிவு மீண்டும் ஏற்பட்டுள்ளது. இதனால், கொழும்பு - பதுளை பிரதான வீதி தடைப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனவே, மாற்று வழிகளை பயன்படுத்துமாறு சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மண்சரிவை அடுத்து வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டமையால் இருபுறமும் வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன. வாகன நெரிசலை குறைக்கும் செயற்பாடுகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மண் சரிவுகள் சேறும் சகதியுமாக ஓடுவ தால், வீதியை சீரமைக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. (அ)

## டக்ளஸ்....

முன்னெடுக்கப்படவில்லை என்றும் கடற்தொழில் அமைச்சானது வடக்கு-கிழக்கு மீனவர்களோடு இணைந்து செயற்படுவதில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சபையில் பொய்யான கருத்துக்களை வெளியிட வேண்டாம் எனவும், தமது குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை முன்வைக்குமாறும் கஜேந்திரனுக்கு கூறினார்.

டக்ளஸ் தேவானந்தா குறுக்கீடு செய்து கருத்து வெளியிட்டதை தொடர்ந்து, இருவருக்கிடையில் பலத்த தொனியில் வாக்குவாதம் இடம்பெற்றது. (அ)

## வடக்கு....

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமானால் அதில் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவார். வடக்கிலும், தெற்கிலும் வாழும் அனைத்து இன மக்களின தும் ஆதரவைப் பெறக்கூடிய ஆளுமை, சக்தி மற்றும் அனுபவம் சஜித் பிரேம தாஸவுக்கு உள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் கடும் சவால்களுக்கு மத்தியில் 45 வீத வாக்குகளைப் பெற்றார். எனவே, இம் முறை அவருக்கு நிகரான வேட்பாளர்கள் இல்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படுமானால் அதிலும் இலகுவில் 113 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சக்தி பெறும். பரந் தப்பட்ட அரசியல் கூட்டணி எமது வசமே உள்ளது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பாதாளக்குழுவுக்கு முடிவு கட்டப்படும் - என்றார்.

## இந்திய....

கடற்றொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர். கடற்படையும் அமைச்சும் மிகவும் வேகமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.? இன்று மீனவர்களுக்கு வாழ்வதற்கு வழியில்லை. இன்று வரை அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை? எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை? இது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன?- என்றார்.

இதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் தொடர்பில் நானும் இணங்குகிறேன். நானும் அதில் மிகவும் தீவிரமாக இருக்கின்றேன். ஆனால் அது தொடர்பில் பிரதமரோ அல்லது வெளிவிவகார அமைச்சரோ அதனை ஏற்றுக் கொண்டு இந்திய ஊடகங்களுக்கு சொன்னதாக எனக்கு ஞாபகத்தில் இல்லை. இந்திய இழுவைப்படகை எமது கடற்பரப்பில் ஒரு வினாடி கூட அனுமதிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு.

அத்துடன் கச்சதீவு தொடர்பாக தெரிவிக்கப்பட்டது. இந்தியாவில் தேர்தல் நடப்பதால் ஏட்டிக்கு போட்டியாக அங்கு இது தொடர்பாக கருத்துக்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் கச்சதீவை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 74 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கச்சதீவு உடன்படிக்கையால் நாம் 84 வீதமான வளங்களை நாம் இந்தியாவுக்கு வழங்கியுள்ளோம்.

அத்துடன் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் நான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றேன்-என்றார். (அ)

## தபால்....

அலுவலகங்களை விற்பனை செய்ய அரசாங்கம் மேற்கொண்டதாகக் கூறப்படும் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நள்ளிரவு முதல் 48 மணிநேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தபால் ஊழியர்கள் தீர்மானித்துள்ளதாக நேற்று முற்பகல் அறிவித்தனர்.

இந்தப் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வு காணத் தவறினால் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தபால் ஊழியர்கள் தயாராக இருப்பதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்திக பண்டார தெரிவித்துள்ளார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## 13ஆம்....

திகதி முதல் 21ஆம் திகதி வரை ஏழு நாட்களுக்கு நடைபெறும் என பாராளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

மேலும், வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நவம்பர் 22 முதல் டிசம்பர் 13 வரை ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்த்து 19 நாட்களுக்கு குழு நிலை விவாதம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 13ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ)

## தரம்....

எரிபொருள் பாவனைக்கு உகந்த நிலையில் இல்லை என இரு ஆய்வக அறிக்கைகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வாறு இருந்தபோதும் கொலன்னாவை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து தரமற்ற எரிபொருளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் எமக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

இது தொடர்பான உண்மைத் தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.அத்துடன் இந்தியன் ஒயில் நிறுவனத்தின் கோரிக்கையை ஏற்று இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் வெளியான அறிக்கைகளின் பிரகாரம் இந்த எரிபொருள் தரத்தில் குறைவாக இருப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தரத்தில் குறைந்தது என உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் இதனை விநியோகிக்க முடிவு செய்வது ஒரு ஆபத்தான விடயமாகும்.

அதனால் தரம் குறைந்த எரிபொருள் விநியோகிப்பதன் சதித்திட்டத்தின் பின்னணி தொடர்பாகவும் இதன் மூலம் இடம்பெற்றிருக்கும் மோசடி கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும் அரசாங்கம் தேடிப்பார்க்க வேண்டும்.

அதேபோல் தரம் குறைந்த எரிபொருளை விநியோகிப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கை தொடர்பில் பிரதமர் முன்வந்து விசாரணை நடத்தி இதன் உண்மைத்தன்மையை சபைக்கு வெளியிட வேண்டும்-என்றார். (அ)

## தனது....

உட்பட்ட பகுதியில். இந்த விபத்து தொடர் பில் விபத்து நடந்த சில மணித்தியா லங்களுக்குள்ளேயே பொலிஸ் ஊடகப் பிரிவுக்கு யாழ்ப்பாணப் பொலிஸ் நிலை யத்தின் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பொறுப்பதிகாரி தகவல்களை வழங்கியிருக்கிறார்.

ஆனால், பொலிஸ் ஊடகப் பிரிவு இந்த தகவல்களை கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வரையில் வழங்கவில்லை. அல்லது ஊடகங்களுக்கு வெளியிடவில்லை.

நாட்டின் அமைச்சரவை அமைச்சர் ஒருவரின் வாகனம் அல்லது அமைச்சின் வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தும் அது தொடர்பில் பொலிஸார் ஊடகங்களுக்கு அறிவிக்காது மறைத்திருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

இந்த விபத்து தொடர்பில் தகவல்களை பொலிஸ் ஊடகப்பிரிவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு பல மணிநேரங்கள் போராட வேண்டிய நிலையே ஏற்பட்டிருந்தது. இறுதியாக தகவல்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணபம் வேம்படி சந்தியில் ஏ-9 வீதியில் வைத்து ஒக்ரோபர் 22ஆம் திகதி இந்த விபத்து நடந்துள்ளது. ஜீவன் தொண்டமானின் அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியிருக்கிறது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த வாகனத்தின் சாரதி யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறார். விபத்துக்குள்ளான இரு வாகனங்களையும் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துள்ளனர். இந்த விபத்து சம்பவம் தொடர்பில் ஜீவன் தொண்டமானின் வாகனத்தின் சாரதி மற்றும் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஜீவன் தொண்டமானின் வாகன சாரதி மற்றும் லொறியின் சாரதிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வாகன விபத்தின்போது ஜீவன் தொண்டமான் வாகனத்தின் உள்ளே இருக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பிரிவு அழுத்தமாக கூறியத. இந்த விபத்து தொடர்பான வழக்கு விசாரணை நவம்பர் 15ஆம் திகதி யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்படவுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# சுமணரத்ன தேரர் மீது நடவடிக்கை வேண்டும்

## சபையில் கோரினார் சாணக்கியன்

கொழும்பு, நவ. 08

மட்டக்களப்பு - மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தமிழ் மக்கள் துண்டு துண்டாக வெட்டுவேன் என தெரிவித்துள்ளதுடன், என்னையும் எனது மக்களையும் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார். இந்த பௌத்த பிக்குவுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பில் இருக்கும் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் எனது நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் கட்டளையை பொலிசார் நடைமுறைப்படுத்தவில்லை என்பதனை வலியுறுத்தியிருந்தேன்.

அந்த விடயத்தை இந்த தேரர் வேறு வகையில் திரிபுப்படுத்தி நான் பாராளுமன்றத்தில் பேசும்போது என்னை தடுக்க அங்கு முதுகெலும்புள்ள சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரும் இல்லையா என்று எனது சிறப்புரிமையை மீறும் ஓர் காணொலியினை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் கிழக்கில் வசிக்கும் தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன் எனவும் அச்சுறுத்தியுள்ளார்.

இவ்வாறாக என்னையும் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் இந்த பௌத்த பிக்குவுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளேன்-என்றார். (அ)

# தரம் குறைந்த எரிபொருளா? நிராகரிக்கின்றார் அமைச்சர்



கொழும்பு, நவ. 08

தரம் குறைந்த எரிபொருள் கையிருப்பு சந்தையில் விநியோகிக்கப்படுவதாக கூறப்படுவதை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர நிராகரித்துள்ளார்.

டீசல் கையிருப்பில் போதுமான அளவு காணப்பட்டதாகவும், பங்குகளின் மாதிரிகள் இன்னும் சோதனை செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

எரிபொருள் இறக்குமதி செய்யும்போதே எமது தரம் தொடர்பில் நாங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்புகின்றோம். அதேபோன்று எரிபொருள் கப்பலுக்கு ஏற்றும்போது அதுதொடர்பான தரம் பரிசோதிக்கப்பட்டு எமக்கு அறிக்கை வழங்குவார்கள். அதன் பின்னர் கப்பலில் வரும்போது அதற்கு குறித்த நிறுவனம் பொறுப்பேற்கின்றது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் தொகை 4 தடவைகள் பகுப்பாய்வுக்கு உட்பட்டு அதன் தரம் உறுதிசெய்யப்பட்ட பின்னரே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கையிருப்பு அறிக்கையின்படி பங்கு வெளியிடப்படவில்லை என்றும், மாதிரிகள் தர சோதனையில் தோல்வியுற்றால் அது நிராகரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், ஐ.ஓ.சி மற்றும் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எரிபொருள் ஒரே தரத்தை கொண்டிருக்கும் எனவும் தெரிவித்த அவர், அதில் எந்த வித்தியாசமும் இல்லை என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

# இந்தியாவுடனான தங்களின் ஈடுபாட்டை தமிழ்க் கட்சிகள் வலுப்படுத்தவேண்டும்!

## வரதராஜப் பெருமாள் கோரிக்கை



சென்னை, நவ. 08

**தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியாவுடனான தங்கள் ஈடுபாட்டை வலுப்படுத்த வேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.**

கோயம்புத்தூரில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றிய அவர், இந்த விடயத்தில் தமிழ் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்களிடம் இருந்து அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

1983-87 காலப்பகுதியில் தமிழ் கட்சிகளும் அதன் தலைவர்களும் புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இந்தியத் தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு இருந்ததை போன்று தற்போது அவ்வாறான உறவு இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதுவது மட்டும் பலன் தராது என்றும் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கூறினார்.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்விற்காக இந்தியாவுக்குள் குரல் இருக்கவேண்டும் என்றும் புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் நெருங்கிய உறவைப் பேணினால் மட்டுமே இது சாத்தியமாகும் என்றும் வரதராஜப் பெருமாள் குறிப்பிட்டார்.

இதேநேரம், தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளுக்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் தொடர்பாக மனிதாபிமானத்துடன் செயறபடவேண்டும் என்றும் வரதராஜப் பெருமாள் கூறினார். (அ)

# சிவில் பாதுகாப்பு திணைக்கள உறுப்பினர்கள் இரட்டை வேடம்

## பாதுகாப்பு அமைச்சு தீவிர விசாரணை

கொழும்பு, நவ. 08

சிவில் பாதுகாப்பு திணைக்கள உறுப்பினர்களின் இரட்டை வேடம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

வழிபாட்டுத் தலங்கள், அரசு மற்றும் பிற நிறுவனங்களில் பணிகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்கள உறுப்பினர்கள், உத்தியோகபூர்வ கடமைகளுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களா என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.



சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணியாளர்கள் அவர்களின் நியமிக்கப்பட்ட கடமைகளுக்கு தொடர்பில்லாத நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்தி விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் பியன்விலவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டுத் தலங்களில் பராமரிப்புப் பணிகள், விவசாயப் பணிகள், யானை வேலிகளைப் பராமரித்தல் மற்றும் பல்வேறு நிறுவனப் பொறுப்புகள் தொடர்பில் இவ்வாறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ அறிவுறுத்தல்களை மீறும் பணியாளர்களின் சேவையை உடனடியாக இடைநிறுத்தும் உத்தரவும் இராஜாங்க அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# நுவரெலியா தபால் அலுவலகத்தை இந்தியாவின் தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு வழங்க தீர்மானம்!

கொழும்பு, நவ. 08

நுவரெலியா தபால் அலுவலகத்தை ஹோட்டலாக மாற்றும் திட்டத்தின்படி, இந்தியாவின் தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக்கு பின்னரான வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று உரையாற்றிய அமைச்சர் குன்வர்தன, நுவரெலியா தபால் நிலை யம் மிகவும் பாழடைந்த நிலையில் காணப்படுவ தாகவும், அதனை புனரமைக்கவோ அல்லது வர்ணம் பூசவோ முடியாத நிலையில் அரசாங்கத்தினால் பராமரிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.



செயலிழந்த மற்றும் பயன்படுத்தப்படாத கட்டடத்தை வளமாக பயன்படுத்துவதற்கான யோசனையொன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

“சீதா எலிய வழியாக வரும் இந்திய சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவில் உள்ள சுற்றுலாத் தலங்களையும் பார்வையிட லாம்,” என்று அவர் மேலும் கூறினார்.

நுவரெலியா தபால் அலுவலகம் நுவரெலியா நகரின் மையத்தில் அமைந் துள்ள ஒரு தொன்மையான அடையாள கட்டிடமாகும்.

டியூடர் மறுமலர்ச்சி கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட இந்த இரண்டு மாடி சிவப்பு செங்கல் கட்டிடம் நாட்டின் பழமையான தபால் நிலையங்களில் ஒன்றாகும். அதனை ஹோட்ட லாக மாற்றும் அரசின் திட்டத்துக்கு சமூகத்தில் கணிசமான எதிர்ப்பு உள்ளது. (அ)

# கொழும்பில் நேற்று கடும் மழை

கொழும்பு, நவ. 08

கொழும்பில் நேற்று திடீரென இடியுடன் கூடிய மழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக, கொழும்பு ஆமர்வீதி, கொட்டாஞ்சேனை உள்ளிட்ட பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மேலும், கடும் காற்று, இடியுடன் கூடிய மழை காரணமாக கொள்ளுப்பிட்டி பகுதியில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

கடும் காற்று மற்றும் மின்னல் தாக்கங்கள் அதிகமாக உள்ளதால் பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.







# வீடியோ ஆதாரத்தை வெளியிட்ட மத்தியூஸ் தனது ஆட்டமிழப்பு தவறானது என வாதம்

பங்களாதேஷிற்கு எதிரான போட்டியில் ஆடுகளத்திற்குள் நுழைந்த அஞ்சலோ மத்தியூஸ் உரியநேரத்திற்குள் துடுப்பெடுத்தாட ஆரம்பிக்காததால் ஆட்டமிழந்தார் என அறிவிக்கப்பட்டமை கிரிக்கெட் உலகில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் மத்தியூஸ் இதனை நிராகரித்து வீடியோ ஆதாரத்தை வெளியிட்டுள்ளார்.

மத்தியூஸ் தான் துடுப்பெடுத்தாடுவதற்கு தயார் நிலையில் உள்ளதை காண்பிக்கும் வீடியோ ஆதாரங்களை வெளியிட்டுள்ளதுடன் தான் ஐந்து நிமிடங்கள் இருக்கும் நிலையிலேயே துடுப்பெடுத்தாட தயாராகிவிட்டதாக தெரிவித்துள்ளார்.

நான் எதிர்கொண்ட சம்பவம் குறித்து விதிமுறைகள் தெளிவாக தெரிவிக்கின்றன. நான் இரண்டு நிமிடங்களிற்குள் அங்கு சென்றுவிட்டேன். எங்களிடம் ஆதாரங்கள் உள்ளன. நாங்கள் விரைவில் அறிக்கை வெளியிடுவோம். எங்களிடம் வீடியோ ஆதாரங்கள் உள்ளன. நாங்கள் அனைத்தையும் ஆராய்ந்துள்ளோம். நாங்கள் எதனையும் ஆராயாமல் இங்குவந்து சொல்லவில்லை. நான் ஆதாரத்துடன் பேசுகின்றேன் எனவும் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

சதீர சமரவிக்கிரமவின் பந்து பிடி எடுக்கப்பட்ட தருணத்திலிருந்து எங்களிடம் வீடியோக்கள் உள்ளன. நான் கிறீசிற்குள் சென்றதன் பின்னர் எனது ஹெல்மெட் உடைந்ததன் பின்னரும் எனக்கு ஐந்து நிமிடங்கள் இருந்தன. நீங்கள் வீரர்களின் பாதுகாப்பு குறித்து தெரிவிக்கின்றீர்கள். ஹெல்மெட் இல்லாமல் நீங்கள் என்னை ஆட ஆரம்பிக்க சொல்கின்றீர்களா எனவும் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

## தேசிய மெய்வல்லுநர் போட்டியில் தங்கம் வென்ற மன்னார் மாணவன்

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் கடந்த 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெற்ற 13 வயதுக்குட்பட்ட இளையோர் தேசிய தடகள சம்பியன் ஷிப் 2023க்கான உயரம் பாய்தல் போட்டியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் பி.புரோமியன் 1.52 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டார். (அ)



# இலங்கையை வென்றது பங்களாதேஷ்!



2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 38ஆவது போட்டி நேற்று முன் தினம் இடம்பெற்றது.

குறித்த போட்டியில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 279 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக சரித் அசலன்க 108 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இவர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பெற்ற இரண்டாவது சதம் இதுவாகும்.

பந்துவீச்சில், பங்களாதேஷ் அணியின் தன்சிம் ஹசன் சாகிப் 80 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஷகிப் அல் ஹசன் 57 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், 280 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 41.1 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில், அதிகபடியாக நஜ்முல் ஹொசைன் சாண்டோ 90 ஓட்டங்களையும், ஷகிப் அல் ஹசன் 82 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், இலங்கை அணியின் தில்ஷான் மதுஷங்க 69 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

# விசித்திரமான ஆட்டமிழப்பு




உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி நேற்று முன் தினம் பங்களாதேஷ் அணியை எதிர்கொண்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவர்களில் 279 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

4ஆம் விக்கெட் வீழ்த்தப்பட்ட பின்னர் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அஞ்சலோ மத்தியூஸ் வந்தவுடனேயே ஆட்டமிழந்த வீரராக அறிவிக்கப்பட்டார்.

உரிய நேரத்திற்குள் துடுப்பெடுத்தாடாத காரணத்தாலேயே அவர் இவ்வாறு ஆட்டமிழந்த வீரராக அறிவிக்கப்பட்டார்.

களத்துக்கு வருகை தந்த அவர் தனது ஹெல்மெட்டை அணியும் போது அதன் பட்டி அறுந்துவிட்டது.

இதனால் மற்றொரு ஹெல்மெட்டை கோரியவாறு மைதானத்தில் அஞ்சலோ மத்தியூஸ் நின்றுகொண்டிருந்தார்.

இந்த சூழலில் அவர் துடுப்பெடுத்தாட மேலும் சிறிது நேரம் தாமதமாவதை அவதானித்த எதிரணித் தலைவரான ஷகிப் அல் ஹஷன் உடனே நடுவரிடம் ஆட்டமிழப்பு கோரினார்.

கிரிக்கெட் விதிகளின் பிரகாரம் விக்கெட் வீழ்ந்து 2 நிமிடங்களுக்குள் துடுப்பெடுத்தாட வேண்டும்.

உரிய நேரத்தைவிட தாமதமாக துடுப்பாட்ட வீரர் களமிறங்கினால் அவரை ஆட்டமிழந்த வீரராக அறிவிக்கும் அதிகாரம் நடுவருக்கு உண்டு.

எதிரணித்தலைவர் ஆட்டமிழப்பு கோரும் பட்சத்தில் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு நடுவருக்கு உள்ளது.

இதனால் ஷகில் அல் ஹஷன் விடுத்த ஆட்டமிழப்பு கோரிக்கையை நடுவரினால் தட்டிக்கழிக்க முடியவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் அஞ்சலோ மத்தியூஸ் எதிரணி தலைவரான ஷகிப் அல் ஹஷனிடம் சென்று உரையாடிய போதிலும் அவர் ஆட்டமிழப்பு கோரிக்கையை வாபஸ் பெறவில்லை.

இதன் காரணமாக அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழந்த வீரராக அறிவிக்கப்பட்டார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இப்படி ஆட்டமிழந்த முதல் வீரர் அஞ்சலோ மத்தியூஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல்தர கிரிக்கெட்டில் இதுவரை இவ்வாறு 6 ஆட்டமிழப்புகள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், கனவான்களின் விளையாட்டாக வர்ணிக்கப்படும் கிரிக்கெட்டில் இவ்வாறு ஒருவரை ஆட்டமிழக்க செய்வதற்கு சிறந்ததல்ல என்றே கிரிக்கெட் விற்பன்னர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

(அ)

# அரபு நாடுகளின் இஸ்ரேலுடனான ஒப்பந்தங்கள்: அகண்ட இஸ்ரேல் திட்டத்திற்கு வழிகோலியதா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

நீண்டகால பகைமை கொண்ட பாலஸ்தீன - இஸ்ரேல் முரண்பாடு மேலும் வலுவாகி, தற்போது பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டு, தீவிரமான முற்றுகைப் போர் காசாவில் நடைபெறுகிறது. பாலஸ்தீனத்தை சிதைத்து அகண்ட இஸ்ரேல் திட்டத்தை விரிவுபடுத்த இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

இந்த அகண்ட இஸ்ரேல் திட்டத்தை விரிவாக்கத்தில் அரபு நாடுகள் இஸ்ரேலுடன் செய்த அமைதி ஒப்பந்தங்களால், பாலஸ்தீன தாயகம் பறிபோகிறதா என்ற கருத்தும் வெளியாகி உள்ளது. உண்மையில் அரபு நாடுகளுடன் சமாதானத்தை பேணுவதாக இஸ்ரேல் வெளி உலகிற்கு காட்டிக் கொண்டாலும், சிறிது சிறிதாக பாலஸ்தீன தாயகம் சிதைக்கப்பட்டது என்பதே உண்மையாகும்.

**எகிப்து - இஸ்ரேல் அமைதி ஒப்பந்தம்:**

1977 ஆம் ஆண்டு எகிப்து ஜனாதிபதி அன்வர் சதாத் இஸ்ரேலுக்கு விஜயம் செய்த 16 மாதங்களுக்குப் பின்னர், தீவிர பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே 26 மார்ச் 1979இல் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாக பரஸ்பர அங்கீகாரம், சூயஸ் கால்வாய் வழியாக இஸ்ரேலியக் கப்பல்களை இலவசமாகச் செல்வதற்கும், 1967ல் எகிப்தால் தடைசெய்யப்பட்ட திரான் மற்றும் அகாபா வளைகுடாவை சர்வதேச நீர்வழிப் பாதைகளாக திறந்து அங்கீகரிப்பதற்கும் வழிகோலப்பட்டது.

1948 அரபு-இஸ்ரேல் போருக்குப் பிறகு இருந்த போர் நிலையை நிறுத்துதல், இருதரப்பு உறவுகளை இயல்பாக்குதல் மற்றும் இஸ்ரேல் கைப்பற்றிய சினாய் தீபகற்பத்தில் இருந்து தனது ஆயுதப்படைகளை இஸ்ரேல் திரும்பப் பெறுதல்.

1967 இல் ஆறு நாள் போரின் போது. எகிப்து சினாய் தீபகற்பத்தை இராணுவ மயமாக்கப்பட்டதை விட்டு வெளியேற ஒப்புக்கொண்டது. இஸ்ரேலிய ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் பிரதேசங்களில் பாலஸ்தீனிய குடிமக்களுக்கு முழு சுயாட்சியை நிறுவ இந்த ஒப்பந்தம் வரையப்பட்டது.

**ஜோர்டான் - இஸ்ரேல் சமாதான உடன்படிக்கை:**

எகிப்துக்குப் பிறகு இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரண்டாவது அரபு நாடு ஜோர்டான் ஆகும். 26 அக்டோபர் 1994 இல், ஜோர்டானும் இஸ்ரேலும் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

இஸ்ரேல் பிரதம மந்திரி ராபின் மற்றும் ஜோர்டான் பிரதம மந்திரி அப்தெல்சலாம் அல்-மஜாலி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.



இஸ்ரேல் ஜனாதிபதி எஸர் வெய்ஸ்மான் ஜோர்டான் மன்னர் ஹூசைனுடன் கைகுலுக்கினர். அன்றைய அமெரிக்க தலைவர் பில் கிளின்டன், வெளியுறவுத்துறை செயலர் வாரன் கிறிஸ்டோபருடன் கலந்து கொண்டனர்.

முதலில் 1987 இல் இஸ்ரேலிய வெளியுறவு மந்திரி ஷிமோன் பெரஸ் மற்றும் ஜோர்டான் மன்னர் ஹூசைன் ஆகியோர் ஒரு சமாதான உடன்படிக்கைக்கு இரகசியமாக முயற்சி செய்தனர். அதில் இஸ்ரேல் மேற்குக் கரையை ஜோர்டானிடம் ஒப்படைக்க முனைந்தது. மத்திய கிழக்கு அமைதி மாநாட்டிற்கான கட்டமைப்பை வரையறுக்கும் ஒப்பந்தத்தில் இரு அரசும் கையெழுத்திட்டன.

இதனால் இஸ்ரேலுக்கும் பிஎல்ஓவிற்கும் இடையே அமைதியான ஒஸ்லோ தீர்மானத்திற்கு ஆதரவாக மேற்குக் கரை மீதான தனது உரிமையை இஸ்ரேல் கைவிட்டது. இதற்காக 1994 இல் எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக் மற்றும் சிரிய அதிபர் ஹபீஸ் அல்-அசாத் ஆகியோருடன் ஹூசைன் ஆலோசனை நடத்தினர்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் மன்னர் ஹூசைனை சமாதான பேச்சுவார்த்தைகளை தொடங்கவும் இஸ்ரேலுடன் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடவும் அழுத்தம் கொடுத்தார் என்பதும் உண்மையே. அத்துடன் ஜோர்டானின் கடன்கள் மன்னிக்கப்படும் என்று அவருக்கு உறுதியளித்தார்.

இம்முயற்சிகளின் வெற்றியினால், ஜோர்டான் இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.



அரபு நாடுகளான எகிப்து, ஜோர்டான், பின்னர் அரபு எமிரேட்ஸ் இஸ்ரேலுடன் செய்த அமைதி ஒப்பந்தங்களால், சமாதானத்தை பேணுவதாக இஸ்ரேல் வெளி உலகிற்கு காட்டிக் கொண்டாலும், சிறிது சிறிதாக பாலஸ்தீன தாயகம் சிதைக்கப்பட்டது என்பதே உண்மையாகும். இந்த உடன்படிக்கைகளின் மூலமே அகண்ட இஸ்ரேல் திட்டத்தை விரிவாக்கி வருகிறது.




இஸ்ரேலும் ஜோர்டானும் உத்தியோகபூர்வ பகைமை நிலையை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதாகவும், இரத்தம் சிந்துவதற்கும் துயரத்திற்கும் ஒரு நியாயமான மற்றும் நீடித்த அமைதியை அடைவதற்காக பேச்சுவார்த்தைகளை தொடங்கும் என்றும் பிரகடனம் செய்தனர்.

இந்த ஒப்பந்தத்தை எகிப்து வரவேற்றது, ஆயினும் சிரியா அதை புறக்கணித்தது. லெபனான் போராளிக் குழுவான ஹிஸ்பொல்லா உடன்படிக்கையை முழுமையாக எதிர்த்தது.

**இஸ்ரேல்- ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அமைதி ஒப்பந்தம்:**

2020 செப்டம்பரில் இஸ்ரேல்- ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. முன்பு 1979ல் எகிப்தும், 1994ல் ஜோர்டானும் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டன. அக்காலத்தில் இஸ்ரேலுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தொடர்ந்து பகைமை போக்கையே கொண்டிருந்தது.

இஸ்ரேல் 1948ம் ஆண்டு தனி நாடாக அறிவிக்கப்பட்டதன் பின், அப்பிராந்தியத்தில் உள்ள பாலஸ்தீனம், லெபனான், எகிப்து, ஜோர்டான், ஈராக் உள்ளிட்ட அரபு நாடுகள் இஸ்ரேலை தனி நாடாக ஏற்கவில்லை. இஸ்ரேல் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், பாலஸ்தீனத்திற்கு ஆதரவான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இஸ்ரேலை எதிரி நாடாக, நீண்டகால விரோதிகளாக இருந்து வந்த இவ்விரு நாடுகளுக்கும் இடையே, சமரச முயற்சியால் 2020இல் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதன் மூலம், இருநாடுகளுக்கும் இடையே தூதரக, வர்த்தக உறவுகள் ஏற்பட்டன. இதன் பின்னர், பாலஸ்தீனத்தை ஒட்டியுள்ள மேற்கு கரை பகுதியை தனது நாட்டுடன் இணைக்கும் திட்டத்தை கைவிடுவதாக இஸ்ரேல் அறிவித்தது.

**ஈரானை தனிமைப்படுத்தும் திட்டம்:**

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்காவின் நீண்டகால எதிரியான ஈரானை தனிமைப்படுத்த தனது நட்பு நாடுகளை அமெரிக்கா ஓரணியில் திரட்ட இன்னமும் முயற்சிக்கிறது. இதன் காரணமாக மத்திய கிழக்கில் ஆதிக்கம் செலுத்தும் ஈரானின் பலம் குறைய வாய்புள்ளதாக ஊகிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்திற்கு ஈரான், துருக்கி, பாலஸ்தீனம் எதிர்ப்பை தெரிவித்தன. இஸ்ரேலுடனான எந்தவொரு அரபு நாடும் இஸ்ரேலுடன் செய்து கொள்ளும் எந்த ஒப்பந்தமும் இறுதியில் அந்த நாட்டுக்கே அச்சுறுத்தலாக அமையும். இஸ்ரேலை அங்கீகரிக்கும் அரபு நாடுகளுக்கு அழிவே மிச்சமாகும் என தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் அரபு நாடுகளின் உறவை நாடியதன் மூல காரணம், ஈரானுக்கு அருகில் ஒரு இராணுவ மற்றும் பொருளாதார மையம் ஒன்றை அமெரிக்கா சார்பாக அமைப்பதேயாகும். இதன்மூலம் அரபு நாட்டை ஈரானுக்கு எதிரான ஒரு தளமாக பயன்படுத்த முயல்வார்கள். இந்த விரிவாக்கத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒரு அகண்ட இஸ்ரேலை உருவாக்குவது தான்.

2020 செப்டம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னிலையில் வெள்ளை மாளிகையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதற்கு அரபு எமிரேட்ஸ், பஹ்ரைனியர்கள் இத்திட்டத்திற்கான உதிரிகளாக பயன்படுத்தப்பட்டனர்.

**பாலஸ்தீன - இஸ்ரேல் ஒஸ்லோ உடன்படிக்கை தோல்வி:**

பாலஸ்தீனிய விடுதலை அமைப்புக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் 1993 இல் ஒஸ்லோவில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாலஸ்தீனிய அதிகார சபை உருவாகியது. ஆயினும் ஒஸ்லோ சமாதான முன்னெடுப்பு உரிய முறையில் செயல்படுத்தப்படாததால் யூத குடியேற்றங்களின் விரிவாக்கத்தை தடுத்து நிறுத்தத் தவறி விட்டமை பின்னர் நிரூபிக்கப்பட்டது.

இந்த ஒஸ்லோ உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த நாள் முதல் பாலஸ்தீனர்களுக்கு தோல்வியாகவே இருந்தது. ஏனெனில் இது ஒரு அரசியல் ஒப்பந்தம் அல்ல, ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் மாத்திரமேயாகும் என ஒஸ்லோ உடன்படிக்கையை வடிவமைத்த அபு மஸென், முன்னைய பாலஸ்தீனிய அதிகார சபையின் தலைவர் அறிவித்தார்.



சர்வதேச உலக சாட்சியத்துடன் உருவான ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் கூட இஸ்ரேல் அது அமைதியைப் பின்தொடரும் ஒரு ஆட்சி அல்ல என்பதை நிரூபித்து விட்டது. இதற்கு திட்டமிட்ட யூத குடியேற்றங்களின் விரிவாக்கமே முக்கிய காரணமாகும்.

**பிரதமர் இட்ஷாக் ராபின் படுகொலை:**

ஒஸ்லோ உடன்படிக்கையை உருவாக்கிய இஸ்ரேல் பிரதமர் இட்ஷாக் ராபினும் பலஸ்தீன் விடுதலை இயக்க தலைவர் யாஸிர் அரபாத்தும் மரணித்ததோடு ஒஸ்லோ உடன்படிக்கையும் உயிரிழந்து விட்டதாகவே கருதப்படுகிறது.

யூத இனவாத வன்முறைக்கு ஒஸ்லோ உடன்படிக்கையை உருவாக்கிய இஸ்ரேல் பிரதமர் ராபின் 1995 இல் ஒரு இஸ்ரேலிய தீவிர தேசியவாதியால் படுகொலை செய்யப்பட்டார்.

இஸ்ரேல் மனித உரிமைகளையோ அல்லது சர்வதேச சட்டத்தின் விதிமுறைகளையோ மதிக்கும் ஒரு அரசல்ல, பலத்தைக் கொண்டு எதுவும் செய்யலாம் என்பதற்கு தற்போது நிகழும் காசா படுகொலைகள் சான்று பகர்கின்றது.

அரபு நாடுகளான எகிப்து, ஜோர்டான், பின்னர் அரபு எமிரேட்ஸ் இஸ்ரேலுடன் செய்த அமைதி ஒப்பந்தங்களால், சமாதானத்தை பேணுவதாக இஸ்ரேல் வெளி உலகிற்கு காட்டிக் கொண்டாலும், சிறிது சிறிதாக பாலஸ்தீன தாயகம் சிதைக்கப்பட்டது என்பதே உண்மையாகும். ●

# தேர்தல் சீர்திருத்தங்கள்: குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டுதல்!



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி தேர்தலை இன்னமும் ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்திற்குள் நடத்தவேண்டியிருக்கும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெரிய அளவில் தேர்தல் சீர்திருத்தங்களைச் செய்வதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார். அதற்காக அவர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றையும் நியமித்திருக்கிறார். எதிரணி அரசியல் கட்சிகளுடனோ அல்லது சிவில் சமூகத்துடனோ முன்கூட்டிய கலந்தாலோசனைகளை நடத்தாமல் அவர் இதைச் செய்திருக்கிறார் போன்று தெரிகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் இது தொடர்பிலான ஆரம்ப அறிவிப்பு வந்தபோது எதிரணி கட்சிகளும் சிவில் சமூகமும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகின. மூத்த சட்டத்தரணிகள் குழுவொன்று உடனடியாகவே அறிக்கை வெளியிட்டு அதன் விசனத்தை தெரிவித்தது.

அரசியலமைப்பின் பிரகாரம் உகந்த முறையில் தேர்தல்களை நடத்துவதற்காக ஊடகங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் வழிகாட்டல்களை வழங்குவதற்கான ஆணையை தேர்தல் ஆணைக்குழு ஏற்கெனவே கொண்டிருக்கிறது என்று சட்டத்தரணிகள் கூட்டமைப்பு (Lawyers Collective) சுட்டிக்காட்டியிருக்கிறது. வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் பல விடயங்கள் தொடர்பில் அந்த கூட்டமைப்பு பல அறிக்கைகளையும் தயாரித்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனும் கூட முன்கூட்டிய எந்த ஆலோசனையையும் கலக்காமல் விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும் சுட்டிக்காட்டியிருக்கும் சட்டத்தரணிகள் கூட்டமைப்பு குறிப்பிட்ட யோசனை முன்வைக்கப்பட்டிருக்கும் நேரம் குறித்து விசனத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் வெறுமனே 11 மாதங்களே இருக்கும் நிலையில், 2024 செப்டெம்பருக்கும் அக்டோபருக்கும் இடையில் அந்த தேர்தல் நடத்தப்படவேண்டியிருக்கும் நிலையில் தேர்தல்செயன்முறைகளை தாமதப்படுத்தும் நோக்கத்துடன் சீர்திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்கு விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று பரவலாக ஐயம் நிலவுகிறது.

இதையும் அரசியல் கட்சிகளினாலும் சிவில் சமூகக் குழுக்களினாலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அக்கறையையும் அலட்சியம் செய்து ஜனாதிபதி இப்போது விசாரணை ஆணைக்குழுவை நியமித்திருப்பதுடன் ஆணையாளர்களின் எண்ணிக்கையை ஒன்பதில் இருந்து பத்தாக உயர்த்தியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அறிவித்தலின் பிரகாரம் ஆணைக்குழுவின் பிரதான பணிகள் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டங்களை விரிவாக ஆராய்ந்து அவற்றை மேம்படுத்துவதற்கான விதப்புரைகளை செய்வதை தழுவியதாக இருக்கின்றன.

தற்போது நடைமுறையில் இருக்கும் சகல தேர்தல் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் ஆராய்ந்து தற்போதைய தேவைகளுக்கு பொருத்தமான முறையில் தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கு அவசியமான விதப்புரைகளை செய்யுமாறு விசாரணை ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

பெண்களினதும் இளைஞர்களினதும் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், அச்சிடப்படும் வாக்குச் சீட்டுகளுக்கு பதிலாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலத்திரனியல் வாக்குப்பதிவு முறையை அறிமுகப்படுத்தல், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களில் விசேட கவனத்தைச் செலுத்துமாறு ஆணைக்குழு பணிக்கப்பட்டிருக்கிறது.

### ஆறு மாதங்கள்

பதினைந்துக்கும் அதிகமான விடயதானங்களை உள்ளடக்கிய பெரிய பட்டியலுடனான பணி ஆணையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அவர்களுக்கு ஆறு மாதகால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஆணைக்குழுவுக்கான விடயதானங்கள் பொதுமக்களுக்கு பெருமளவுக்கு அக்கறையில்லாதவையும் பொது விவாதங்களில் பரிசீலிக்கப்பட்டிராதவையுமான விவகாரங்களையும் உள்ளடக்கியிருக்கின்றன. குறிப்பாக மக்களின் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்படுவதற்கு ஒருவர் மாகாணசபை தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் போட்டியிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்டால் இரு சபைகளிலும் அங்கம் வகிப்பதற்கும் வகைசெய்யக்கூடிய ஏற்பாடு குறித்து ஆராயுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் போன்று அன்னிய மண்ணில் வாழும் இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான வாயப்பைக் கொடுப்பது குறித்து ஆராயுமாறும் ஆணைக்குழு பணிக்கப்பட்டிருக்கிறது.




**ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் சிக்கல் நிறைந்த பணிகளை அதற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆறு மாத கால அவகாசத்திற்குள் அல்லது ஜனாதிபதி தேர்தல் வருவதற்கு முன்னதாக நிறைவுசெய்வது சாத்தியமில்லை.**

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் இது மிகவும் சிக்கலானதும் பெரும் செலவுபிடிக்கும் பணியாக இருக்கப்போகிறது. கடந்த ஒரு வருடங்களில் மாத்திரம் பத்து இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டில் இருந்து வெளியேறியிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மக்களின் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல், சமூகத்தின் பன்முகத்தன்மையைய கருத்தில் எடுத்து அந்த தேர்தல் முறையும் பழைய தொகுதி அடிப்படையிலான முறையும் கலந்ததான பொறிமுறையொன்றை வகுக்குமாறும் ஆணைக்குழுவுக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது காலவரை தீர்க்கப்படாத சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்துவருகிறது.

இது தொடர்பிலான விவாதம் தீர்வு எதுவுமின்றி பல வருடங்களாக தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. மாகாணசபை தேர்தல்களுக்கான தொகுதிகளின் எல்லை மீள்நிர்ணயம் இப்போது ஐந்தாவது வருடமாக இழுபடுகிறது. இந்த காலப்பகுதியில் இந்த பிரச்னையை கையாள முயன்ற இரு அரசாங்கங்கள் பதவிக்கு வந்தன. அவற்றையும் கடந்து பிரச்சினை நீடிக்கிறது.

மிகவும் சிறிய உள்ளூராட்சி தொகுதிகளை மீள் நிர்ணயம் செய்யும் பணி கூட அரசாங்கங்களின் ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்கிறது.

முன்னாள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையிலான தேசிய எல்லைநிர்ணய குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை. ஏனென்றால் அந்த அறிக்கையை பல அரசியல் கட்சிகள் விரும்பவில்லை என்று மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர கூறியதாக அண்மையில் செய்தி வெளியானது.

பூர்வாங்க அறிக்கை அந்த குழுவின் தலைவரினால் 11 ஏப்ரில் 2023 அன்று பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது. அதை தொடர்ந்து இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இப்போது ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட தொகுதிகளின் எல்லை மீள் நிர்ணயத்துக்கு அரசியல் கட்சிகளினதும் பாராளுமன்றத்தினதும் அங்கீகாரத்தை பெறுவதில் எந்த முன்னேற்றமும் இல்லை.

### முதலில் தேர்தல்கள்

எனவே, விசாரணை ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் சிக்கல் நிறைந்த பெருவாரியான பணிகளை அதற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆறு மாத கால அவகாசத்திற்குள்ளோ அல்லது ஜனாதிபதி தேர்தல் வருவதற்கு முன்னதாகவோ நிறைவு செய்யக்கூடியது சாத்தியமானதாக இருக்கப்போவதில்லை.

உள்ளூராட்சி, மாகாசபைகள், பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதி தேர்தல் என்று சகல மட்டங்களிலுமான தேர்தல்கள் தொடர்பில் தீர்வுகளைக் காண விதப்புரைகளைச் செய்யுமாறு ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

மாகாணசபை தேர்தல் முறைக்கு ஐந்து வருடங்கள் கடந்தும் இன்னமும் வெற்றிகரமான தீர்வு ஒன்றைக் காணமுடியவில்லை என்றால் நான்கு மட்டங்களிலுமான சகல தேர்தல் முறை தொடர்பில் இணக்கப்பாடொன்றைக் காண்பதற்கு எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டிவரும் என்று நினைத்துப் பாருங்கள்.

தேர்தல்கள் வரும்போது உரிய காலத்தில் அவற்றை நடத்துவதற்கு தவறுவதன் விளைவாக அரசாங்கத்தின் நியாயப்பாடு கடுமையாக அரித்துச் செல்லப்பட்டு தேசிய பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளிப்பதற்கான அதன் முயற்சிகள் ஆபத்துக்கள்ளாகும் சாத்தியம் இருக்கிறது.

மிகவும் தீவிரமான நெருக்கடி நிலவும் சூழ்நிலையில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முயற்சிகளில் ஈடுபடும் எந்தவொரு அரசாங்கம் அதிகாரத்தில் இருப்பதற்கான அதன் நியாயப்பாட்டை வலுப்படுத்துவதற்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

ஜனநாயக நாடொன்றிலே நியாயப்பாடு என்பது உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவதில் இருந்தே வருகிறது. மக்களின் இறைமை என்ற சிந்தனை மீதே ஜனநாயகம் கட்டியெழுப்பப்படுகிறது. அரசாங்கத்தின் அதிகாரம் மக்களின் விருப்பத்தில் இருந்தே பிறக்கிறது என்பதே இதன் அர்த்தமாகும்.

ஆணையொன்றைப் பெறுவது இந்த அடிப்படை ஜனநாயக கோட்பாட்டுடன் ஒருங்கிசைந்ததாக அமைகிறது. மக்களிடமிருந்து பெறப்படும் ஆணை அரசியல் சீர்திருத்தங்களின் நியாயப்பாட்டை மேம்படுத்துகிறது. குடிமக்களின் சம்மதத்துடனும் அங்கீகாரத்துடனும் மாற்றங்கள் செய்யப்பட்டு ஆட்சிமுறையின் ஜனநாயகக் கோட்பாடு நிலைப்படுத்தப்படுவதை அது உறுதிசெய்கிறது. சீர்திருத்தங்களுக்கு தடையாக இருப்பவற்றை அகற்றுமுகமாக தற்போதைய தருணத்தில் தேர்தல்கள் தேவைப்படுகின்றன. அவையே மக்களின் ஆணையைப் பெற்றுக் கொடுக்கின்றன. வேறு வழியில் அல்ல.

பெறப்படும் ஆணையொன்று சமூக அமைதியின்மைக்கான சாத்தியத்தைக் குறைப்பதுடன் பெரும்பான்மையான மக்களின் விருப்பங்களுக்கு இணங்க அரசாங்கம் நடந்துகொள்கிறது என்று காட்டுவதன் மூலமாக உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துகிறது.

ஒரு ஆணை பெரும்பான்மையான மக்களின் ஆதரவை உறுதிசெய்வதுடன் மக்களின் சம்மதம் இன்றி திணிக்கப்படும் மாற்றங்களின் விளைவாக தோன்றக்கூடிய சமூக அமைதியின்மைக்கு அல்லது மக்கள் மத்தியில் பிளவுகளுக்கான சாத்தியங்களை குறைக்கிறது. கட்சியொன்றின் அரசியல் வாய்ப்புக்கள் ஜனநாயகத்தின் அத்திபாரமாக இருக்கும் கிரமமான தேர்தல்களை நடத்தும் செயன்முறைக்கு கீழ்ப்படிவானதாக இருக்கமுடியாது.

இலங்கையின் துடிப்பான ஜனநாயகத்தையும் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் உரிய காலத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு வசதியாக அமையக்கூடிய அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதில் ஜனாதிபதி அடுத்த ஒரு சில மாதங்களுக்கு கவனத்தை செலுத்துவாரேயானால் அவரது நலன்களுக்கு அது பெரிதும் உதவும்.

மக்களின் ஆணையைப் புதுப்பிப்பது புதிதாக தெரிவு செய்யப்படும் அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் என்பதுடன் மக்களின் ஆதரவுடனான அரசாங்கத்துக்கு சர்வதேச வளங்கள் வந்துகுவிய கதவுகளையும் திறக்கும். ●

# வடமராட்சி கரவெட்டியில் ஒரு முக்கிய வீதியின் அவலநிலை

வடமராட்சி கரவெட்டியில் முக்கியமான ஒரு வர்த்தக மையமாக வளர்ந்துவரும் நெர்லியடி நகருக்கு மிகவும் அருகாமையில் இருக்கும் சாமியன் அரசடி சந்தியில் இருந்து தெற்கு நோக்கி சோனப்பு மயான வெளிக்கு செல்லும் சுமார் ஒரு கிலோ மீட்டர் வீதி சில வருடகாலமாக செப்பனிடப்படாமல் இருப்பதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கவேண்டியிருக்கிறது.



இந்த வீதியில் இரு வைத்தியசாலைகள் இருக்கின்றன. இரு முக்கிய பாடசாலைகளுக்கும் தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்துக்கும் இந்த வீதியூடாகவே செல்லவேண்டும்.

கோடை காலத்திலேயே மோசமான நிலையில் காணப்படும் இந்த வீதியில் மாரி காலத்தில் மக்கள் அறவே பயணம் செய்யமுடியாத அளவுக்கு ஆங்காங்கே வெள்ளநீர் தேங்கிக் காணப்படுகிறது.

கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழைக்கு பிறகு எடுத்த படங்களையே இங்கு காண்கிறீர்கள்.

வீதியைச் செப்பனிடப்படுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது சிலர் செய்ததாகக் கூறப்படும் இடையூறுகள் காரணமாக அது நிறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. குண்டும் குழியுமாக காணப்படும் இந்த வீதிக்கு சமாந்தரமாக இருக்கும் பல வீதிகள் செப்பனிடப்படுகின்ற போதிலும் இதை செப்பனிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கரவெட்டி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.



கரவெட்டி உடுப்பிட்டி தேர்தல் தொகுதியின் முக்கிய பகுதியாகும். யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேரில் நான்கு பேர் உடுப்பிட்டி தொகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

எம்.ஏ. சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அங்கஜன் இராமநாதன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரே அவர்கள். அதிலும் குறிப்பாக சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும் கரவெட்டிப் பூர்வீகத்தைக் கொண்டவர்கள். அங்கஜனைப் பொறுத்தவரை கடந்த பாராளுமன்ற தேர்தலில் உடுப்பிட்டி தொகுதியில் கூடுதல் வாக்குகளைப் பெற்றவர். பழைய தேர்தல் தொகுதி முறையின் அடிப்படையில் பார்த்தால் அவரே உடுப்பிட்டியின் பாராளுமன்ற உறுப்பினர்.

இவ்வாறாக நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களாக இருக்கின்றபோதிலும், தங்கள் கிராமத்தின் மத்தியில் உள்ள முக்கிய வீதி ஒன்று இத்தகைய அவலநிலையில் இருப்பதையிட்டு கரவெட்டி மக்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

சோனப்பு மயானத்துக்கு செல்லும் வீதி என்பதால் தான் இவ்வாறு அலட்சியம் செய்யப்படுகிறதோ என்று சிலர் சமூக ஊடகங்களில் நையாண்டி கூட செய்வதையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்த வீதியை செப்பனிடுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் காரணிகளை அடையாளம் கண்டு களைந்து துரிதமாக செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதை பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுசெய்யவேண்டும் என்று மக்கள் வேண்டுகிறார்கள். அவர்கள் உடனடியாக இது விடயத்தில் கவனம் செலுத்துவார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள்.



அதேவேளை பகுதி மக்களும் பொதுநலன் கருதி ஒன்றுபட்டு எதிர்வரும் நாட்களில் வீதியைச் செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப் படுவதற்கு வசதியாக தங்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**- பாலன்**

